

# செந்தமிழ்ச் செல்வி

## திங்கள் வெளியீடு


| சிலம்பு ௩௨ | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௮, மார்கழி<br>சனவரி, **1958** | பரல் ௫ |
| --- | --- | --- |


## தாய்மொழியே நாட்டின் தனியுயிர்

ஒரு நாட்டின் இருவிழியாகவும் முன்னேற்றத்திற்குப் பெருவழியாகவும் இருப்பது அந்நாட்டு மக்களின் அருமைத் தாய்மொழியேயாகும். தாய்மொழியின் வளர்ச்சியே நாட்டின் தனிப் பெருமைக்கு எடுத்துக் காட்டாகும். ஒரு நாட்டின் மக்களை எவ்வகை வேற்றுமையுமின்றி ஒற்றுமையுடன் வாழச் செய்வதும் அந்நாட்டு மொழியேயாகும். அம்மொழி எல்லா வகையாலும் எல்லா இடங்களிலும் சிறப்பாகப் பயிலப்பட்டு ஓங்குதல்வேண்டும். மேலும் தன் தூய்மையினையும் அழகினையும் இழவா திருத்தல்வேண்டும். பிறநாட்டவரும் பெருமைப்படுத்தும் முறையில் பிறங்குதல்வேண்டும்.

இம்முறையில் நம் தாய்மொழியாம் தமிழ்மொழி உலகிலேயே விளங்கும் சிறந்த மொழிகள் சிலவற்றுள் தொன்மை நலம் சிறந்த தொன்றாகும். எந்த மொழியும் தனித்தியங்கும் ஆற்றலை இழந்துவிடின் அம்மொழி செம்மொழியெனச் சிறந்தோரால் போற்றப்படமாட்டாதென்பது உலகறிந்த உண்மையாகும். ஒரு மொழி தனித்தியங்கும் ஆற்றலை எப்பொழுது இழந்துவிடுகின்ற தெனக் காண்கின்றோமென்றால், அம்மொழி பிறமொழிக் கலப் பால் தன் தூய்மை நலத்தை இழக்கநேரும்பொழுதேயாம். எடுத்துக் காட்டாகக் கன்னடம், தெலுங்கு, மலையாள முதலிய பண்டைத்தூய தமிழ்மொழிகள் தம்மியல்புக்கு ஏற்ப அயன் மொழிச் சொற்களை உருவாக்கி அமைத்துக்கொள்ளாது அவ்வயன்மொழி வரிவடிவொடும் ஒலியொடும் வழங்கிவந்தன. அதனால் இந்நாளில் அவை தனித்தியங்கும் ஆற்றல்களை இழந்தன.

ஆனால் அவற்றிற்குத் தாய்மொழியாக நின்றுநிலவிய செந்தமிழ் மற்றை அயன்மொழிச் சொற்களை வகைதொகையின்றி ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்கநேர்ந்தகாலத்தும் பொருளையேற்று அதற்கு வேண்டும்சொல்லைத் தூய தமிழிலேயே வழங்கிவந்தனர். எடுத்துக் காட்டாகத் திருமுருகாற்றுப்படையில் "நாவலொடு பெயரிய பொலம்" எனவும், கலித்தொகையில் "வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர்பெற்ற முகத்தவன்" எனவும் முறையே சாம்புநதப் பொன்னையும், திரிதராட்டிரனையும் குறிக்கக் கையாண்டுள்ளனர்.

பண்டை நம் செந்நாப் புலவர்கள் தளராமுயற்சியுடன் தனித் தமிழை வளர்க்கா நின்ற வாய்மை மேலதனால் வலியுறும். அம்முறையில் அவர்கள் கண்ணுங் கருத்துமாகக் காத்துத் தந்தமையாலன்றோ ஏறத்தாழ ஐயாயிரத்தறுநூறு ஆண்டுகளுக்கு முன்னுள்ள ஒல்காப் பெரும்புகழ்ச் செந்தமிழ்மொழியின் விழுமிய முழுமுதலிலக்கணமாம தொல்காப்பியத்தை நாம் இந்நாளாக்கப்பெற்ற நூல்போன்று எவ்வித இடர்ப்பாடுமின்றி இனிதாகக் கற்கவும் பொருள் எளிதாகக் கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுகின்றது. இன்னும் அம்முறையே காப்போமாக.

நம் இந்தியப் பேரரசோடிணைந்தியங்கும் சிற்றரசுகள் பலவும் தனித்தனித் தாய்மொழிகளை யுடையனவாகத் திகழ்கின்றன. அவற்றுள் நம் தாய்மொழியாம் தமிழ்மொழியும் ஒன்று. நம் தமிழ், மூவேந்தர்காலத்து இப்பொழுது ஆங்கிலமொழி உலகப் பெருமொழியாக இருப்பதுபோல் எங்கணும் பரவியிருந்த வுண்மை சங்க நூல்களால் அறியலாம். பின்னர்ப் பல்லவர், மொகலாயர், ஆங்கிலேயர் முதலிய அயலவர் ஆட்சியால் சீரழிவு ஏற்பட்டு அடங்கிற்று. காந்தியடிகளாரால் கிடைத்துள்ள விடுதலையால் நம்மொழியும் விடுதலை எய்தி உரிமையுடன் பண்டுபோல் திகழப் பல வழிகளிலும் முன்னேறிவருகின்றது.

இப்பொழுது நல்லகாலமாகப் பள்ளிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் போதனாமொழி தமிழாக இருப்பதனால் கற்பார்க்கும் கற்பிப்பார்க்கும் பெரிதும் எளிதாக இருக்கின்றது. பொருள்களையும் விரைவில் உணர்ந்துகொள்ளமுடிகின்றது. அதனால் பிறர்க்கு எளிதாக உணர்த்தவும் முடிகின்றது. எனவே ஒருவருடைய உணர்ச்சிக்கும் அவர்தம் தாய்மொழிக்கும் நெருங்கிய ஒற்றுமை இயற்கையாக அமைந்துள்ளதென்பது புலனாகின்றது. இவ்வுண்மையினை நம் பேரரசின் முதலமைச்சர் நேரு அவர்கள் அண்மையில் சென்னையில் நிகழ்த்திய தம் அழகிய சொற்பொழிவு ஒன்றில் கூறியுள்ளார். நம் தமிழ்மொழி இனிக் கல்லூரிப் போதனாமொழியாகவும், சென்னை மாநில

ஆட்சிமொழியாகவும், தொழில்துறை, வணிகத்துறை முதலிய இடங்களில் வழங்கும் வனப்புமொழியாகவும் துலங்கும். அந் நாளில் இன்னும் சீரும் சிறப்பும் எய்தித் திகழும். மேலும் நேரு அவர்கள் எந்த நாட்டிலும் போதனுமொழி அவ்வந்நாட்டுத் தாய்மொழியாகவே இருத்தல்வேண்டுமெனவும் இருக்கும் எனவும் கூறியுள்ளார்கள். அதற்குத் தம்பால் நிகழ்ந்த ஓர் உண்மை நிகழ்ச்சியையும் எடுத்துக் காட்டியுள்ளார்கள். அது வருமாறு: தாம் தம் இளமைக் காலத்தில் ஆங்கில நாட்டிற்கற்குங் கால் ஆங்குள்ள ஏனைய தம் நாட்டவருடன் ஆங்கிலத்தில் பேசு வதைக் கண்ணுற்ற ஆங்கில நண்பர்கள் தம்மைநோக்கி "ஏன் ஐயா நீங்கள் ஒரு நாட்டவராயிருந்தும் ஒருவருக்கொருவர் எங்கள் ஆங்கிலத்திலேயே பேசிக்கொள்கின்றீர்கள்? உங்களுக் கென உரிய தாய்மொழி ஒன்றும் இன்று?" என்று வினவினராம். அது முதல் நம் நேரு அவர்கள் தம்மவருடன் பேசுவது மட்டுமலல, இலண்டன், பிரான்சு, செர்மனி முதலிய இடங் களில் பேசநேர்ந்த கூட்டங்களிலெல்லாம் தாம் பேசவேண்டிய பொருளைப்பற்றித் தம் தாய்மொழியில் முதலில் பேசிவிட்டுப் பின் ஆங்கிலத்தில் பேசுவதை வழக்கமாகக் கொண்டனராம்.

கல்லூரிப் படிப்புத் தமிழ்மொழியில் வருங்கால் சில அறிவியல்துறைச் சொற்கள் ஆங்கிலத்துள்ளவற்றை அப்படியே எடுத்துக் கையாளுவது எல்லார்க்கும் நன்மை பயப்பதாகும்; ஏனென்றால் உலகெங்கணும் அச்சொல் அப்படியே கையாளப் பட்டு வருதலினுன் என்க. அதனால் எல்லாமொழிக்கும் ஒரு வகை எழுத்தையே கையாளவேண்டுமென்று சிலர் எண்ணுவது ஒரு சிறிதும் பொருந்தாது. தமிழ்மொழியைப் பொறுத்த மட்டில் மொழியும், மொழியமைப்பும், ஓசையும், எழுத்தும், எழுத்து வடிவமும் உயர்ந்த சமயக்கொள்கைகளும், மந்திரக் குறிக்கோளும் உடையன. அவற்றை மாற்றுவது ஆருயிரை மாற்றுவதேயொடொக்கும். அதனைத் தமிழ்மக்கள் ஒருகாலும் ஏற்றுக்கொள்ளார். கல்லூரிப் படிப்பில் முதலிற் சில ஆண்டுகள் சிற்சில வருத்தம் ஏற்படினும் நாளடைவில் எளிதாகிவிடும். நாட்டுக்கும் மொழிக்கும் நன்னலம் பயக்கும். ஆட்சிமொழியில் தமிழ் இடம்பெறுவிட்டால் அஃது எல்லாக் கலைகளிலும் சிறந்து வளர்ந்து முதன்மையுற இடம்பெறுது. ஆங்கிலேயர் ஆட்சியில் அடங்கி ஒடுங்கியதுபோல் மீண்டும் தாழ்ச்சியுறும்.

ஆங்கிலேயர் ஆட்சி ஒன்றரை நூற்றாண்டுகளுக்குமேல் தொடர்ந்துநிலவியும் ஆங்கிலங் கற்பதால் பொருள் வருவாயும், நிலையுயர்வும், முதன்மை மதிப்பும் ஏற்படுவது கண்டும் ஆங்கிலங் கற்றவர் நம்மவரில் எத்துணையர்? ஒரு சிலரேயாவர். அச்

சிலருள்ளும் ஆங்கில நன்மக்களைப் போன்று எழுதவும் பேசவும் திறல்படைத்தார் எத்துணையர்? இவர்களால் தாய்மொழிக்கும், நாட்டுக்கும், பெருமக்களுக்கும் எய்தியுள்ள நன்மை எத்துணைத்து? எண்ணிப் பார்த்தால் ஏதும் இன்றென்பதே விடையாகும். அதனால் அயன்மொழியால் உயர்வுண்டாம் என்பது உண்மையாகாது.

மேலும் இந்தியப் பொதுமொழியாக ஒன்று இருத்தல் வேண்டும் என்பது உண்மையே ஆயினும், அஃது எல்லார்க்கும் ஏற்றதாய் வெளியுலகத் தொடர்புடையதாய், எல்லா வளர்ச்சியும் உடையதாய், நம் நாட்டிலும் எல்லாப் பக்கங்களிலும் எல்லாரானும் பயின்றுவந்துள்ளதாய் உள்ள ஆங்கிலமே ஏற்றதாகும். இவ்வுண்மையினை நன்குணர்ந்தே எல்லாவகையானும் சிறந்த பேரறிவு வாய்ந்த பெருந்தலைவர் இராஜாஜி அவர்கள் ஆங்கிலமே ஏற்புடையதென்று பலவகையானும் வற்புறுத்திவருகின்றனர். இந்நாளில் பேருலகத் தொடர்பின்றி எந்த நாடும் வாழ முடியாதென்பது ஒருதலை. அதற்கு இந்தியோ, அல்லது வேறெந்த இந்தியமொழியோ, வெளியுலகமொழியோ துணை செய்யமாட்டா ஆங்கிலம் ஒன்றுமே துணைசெய்யும். இதனை இந்தியப்பேரரசு நன்காய்ந்து ஆங்கிலத்தினையே பொதுமொழியாகவைப்பது சால்புடைத்தெனை வற்புறுத்துகின்றோம். மேலும் நம் இந்தியப் பெருநிலமக்களனைவர்களும் தம் தம் தாய்மொழியோடு உலகத்தின் பெரும்பான்மையோரால் பேசப்பெறும் ஆங்கிலத்தைப் பொதுமொழியாகவும் வைத்துக்கொண்டால் ஒவ்வொருவரும் இருமொழிகள் மட்டும் கற்கவேண்டிய இன்றியமையாமை ஏற்படும். அதற்குமேல் எல்லாரும் கற்கவேண்டும் என்னும் கட்டாயம் ஏற்படமாட்டாது. இந்தியைத் தாய்மொழியாகப் பேசும் மக்கட்கும், இந்தி பேசாத மக்கட்கும் இம்முறை ஒரு நிகர்த்தாயிருக்கும். இஃது எல்லார்க்கும் எளிதாகவும் இனிதாகவும் இருக்கும் என்பதில் எட்டுணையும் ஐயமின்று.

தமிழ்நாட்டவர்களுக்கு இந்தித் திணிப்பால் ஏற்படும் அச்சம் நேரு அவர்களின் அழுத்தமான மொழியால் அகலுதல் கூடும்; போதனாமொழியாகத் தமிழ் அமைவதுபோன்று ஆட்சி மொழியாகவும் அமைந்து, ஆங்கிலப் பொதுமொழியாகவும் வருமாயின் என்க. வீணாகப் பயிலும் மாணவர்களை ஒன்றிரண்டு மூன்று மொழிகளைக் கற்கவேண்டுமென்று வற்புறுத்தினால் அவர்தம் கல்வி ஆற்றல் சிதருண்டு வளர்ச்சி தடைப்படும் என்க. தாய்மொழிப் பயிற்சியையன்றி வேறெம்மொழிப் பயிற்சியினையும் கட்டாயப்படுத்துதல் ஏற்புடையதாகாது.

# பொங்குக செந்தமிழ்ப்பால்!

[திரு. புலவர் அரசு]

பொங்குக செந்த மிழ்ப்பால்! பொங்குக குறளின் முப்பால்!
எங்கணும் இயலி சைநா டகமினி தியன்று வாழ்க!
திங்கள்மும் மாரி பெய்து செந்நெலும் கரும்பும் ஓங்கி
நங்கள்செந் தமிழ்நா டின்ப நாடென நவில வாழ்க!

உரிமைபெற் றிட்டோம் என்றால் உரியதாய் மொழியும் ஆட்சி
உரிமையெய் திடல்மன் வேண்டும்; உறுபிற மொழிக்கீழ் வாடல்
உரிமையென் பதுவுமாமோ? உயர்தமிழ் மொழிக்கு மேலோர்
உரிமைசால் மொழிதான்நிற்க உளம்பொறோம் எனவே கொண்மின்!

ஆரியத் தலந்து பன்னாள் ஆங்கிலத் தின்கீழ் மங்கி
ஓரியற் குஞ்சால் பின்றி ஒடுங்கிய தமிழ்தான் மேலும்
சீரியற் கின்றி யிந்தி சேர்ந்துமே லாட்சி கொள்ளல்
ஆரினிப் பொறுப்பார்? நந்தம் அன்னையைக் காக்க வம்மின்!

‘இனித்தின்ப உள்ளத் தூறி யிசைத்திடின் எழுதின் யார்க்கும்
இனித்திடுஞ் செந்த மிழ்க்கண் எம்மொழி யுஞ்சேர் வொட்டேம்
தனித்தமிழ் வேண்டும்’ என்பார் வெறியரோ? தகவி லாமற்
பனித்திடப் பழிப்பார் தம்மைப் பார்த்துநீர் பனியீர் வம்மின்!

‘கலைபல கற்றல் வேண்டிற் பிறமொழி கற்க’ என்னும்
நிலையினை மாற்றி யின்பம் நேருறு கலைக ளெல்லாம்
நிலைபெறத் தமிழி லாக்கும் பணியினை வல்லோர் நேர்மின்!
கலையெலாந் தமிழிற் பொங்கிற் கருத்தின்பம் பொங்கும் நன்றே.

மெய்யுழைப் பின்றி நீழல் வெளுத்தமர்ந் தூதியங் கொள்
பொய்யுழைப் பினிலே சோம்பும் புன்மையின் நீங்கி யெங்கும்
செய்தொழில் வளர்ந்து பொங்கிச் செழிப்புற! வணிகம் ஓங்கி
மெய்வளந் தமிழ்நா டெய்தி உலகினில் விளங்கி வாழ்க!

# மறைமலையடிகளின் மணிமொழிகள்

(செல்வி, சிலம்பு - ௩௨, பரல் - ௪, ௨௧0-ஆம் பக்கத் தொடர்ச்சி)

(௪௩) மிகுதியான காற்று உலவப் பெறாத ஒடுக்கிடங்களிலுஞ் சிறிய அறைகளிலும் நம்மவர்கள் நெருக்கமாகப் படுத்துத் தூங்குதலும் உறைதலுஞ் செய்கின்றார்கள். இங்ஙனஞ் செய்வதனால் அவ்விடங்களிற் குறைவாக உள்ள நல்ல காற்றும் அவர்களது மூச்சினால் மிகு விரைவிற் கெட்டு நஞ்சாய்ப் போதலால், அவர்கள் அந்த நச்சுக் காற்றைப் பிறகெல்லாம் உள்ளிழுத்துத் தமது உடம்பை நோய்க்கு இரையாக்குகின்றார்கள்.

(௪௪) தடிப்பான பொருள்களையெல்லாம் நிலமானது தன்னிடத்தே இழுக்குந் தன்மையுடைமையினால், நஞ்சுக் காற்றானது எப்போதும் நிலமட்டத்தில் உலவிக் கொண்டிருக்கும்; உயிர்க் காற்றோ நொய்ய பொருளாகையால் நிலமட்டத்திற்குமேல் உலவிக்கொண்டிருக்கும். இந்த ஏதுவினால், நிலத்தின்மேற் படுப்பதைக் காட்டிலுங் கட்டிலின்மேற் படுப்பதே மிகவும் நல்லதாகும்.

(௪௫) வெப்பமுந் தட்பமும் உரமாக உலவுதல் இல்லாத இரவின் பிற்காலத்திலேதான் உடம்பின் நிலையை மிகவும் உன்னிப்பாய்ப் பார்த்தல் வேண்டும். அக் காலத்திலேதான் நோயை உண்டுபண்ணுதற்கு உரிய நச்சுப் பொருள்கள் உடலுள் வந்து நுழைகின்றன. அப்போதுதான் உடம்பில் அசதியும் உறக்கமும் மிகுதிப்படுகின்றன. இவ் வியல்பை அறிந்து யாரும் அப்போது கண்விழித்திருத்தலும், வேறு முயற்சிகள் செய்தலுஞ் சிறிதுங்கூடா. இரவின் பிற்பாகத்திற் கண்விழித்திருப்பார்க்கும், வேறு முயற்சிகள் செய்வார்க்கும் நோய் விலை கொடுத்து வாங்கினாற்போல வந்து சேரும்.

(௪௬) பொய்பேசும் பழக்கத்தைத் தொடர்ந்து பழகுவார்க்கு வெறி, மார்படைப்பு, என்புருக்கி, காக்கைவலி, கைகால் மரத்தல் முதலிய பல கொடிய நோய்கள் வரும்.

(௪௭) நீரும் நெருப்புமில்லையானால் நமதுடம்பும் உயிரோடு இராமற் பிணமாய்க் கிடக்கும். உயிர் உடம்பால் உலவும் வரையிலும் உடம்பிற் சூடானது காணப்படும்; அஃது உடம்பை விட்டுப் போய்விடுமாயிற் சூடும் இல்லாமற் போய்விடுவது திண்ணம்,

(௪அ) உடம்பினைத் தோற்றுவித்தும் அதனை நிலைபெறுவித்தும் வருகின்ற சூடானது அவ்வுடம்பினுள் அழுக்குகள் நிறைந்து வெளிப்போகாமல் தங்கிவிடுமானால் அவ் வழுக்குகளை எரித்து உடம்பைத் தூய்தாக்குதற்குத் துவங்குகின்றது. அவ்வாறு அவ் வழுக்குகளை எரித்து வரும்போது, அவ் வழுக்குகள் உடம்பினளவினும் மேற்படுமானால் அவ் வுடம்பு பயன்படாதென்பதை யுணர்ந்து அவ் வுடம்பையுங் கூடவே சேர்த்து எரித்துவிடுகின்றது.

(௪௯) உடம்பினுள்ளே தோன்றுஞ் சூட்டின் மிகுதியையே சுரம் என்றும் காய்ச்சல் என்றும் வழங்கி வருகின்றார்கள். உடம்பில் நிறைந்த தூவா நச்சுப் பொருட்டொகுதி சிறிதாயிருந்தால் அதனை எரிக்கும் பொருட்டுத் தோன்றுஞ் சூடாகிய சுரமுஞ் சிறிதாய் அதனை எளிதிலே எரித்துத் தணிந்துபோகும்; அவ்வாறன்றி நச்சுப் பொருட்டொகுதி பெரிதாயிருந்தால் அதனை எரிக்கத் தோன்றுங் காய்ச்சலும் பெரிதாய் வளர்ந்து எரியும்; அப்போது அதன் கடுமையால் உடம்பிலுள்ள இரத்தமெல்லாஞ் சுவறி வறண்டுபோக உயிர் அதனுள்ளிருக்க இடம் பெறாதாய் அதனைவிட்டு நீங்கிப்போகின்றது. ஆகையாற்றான், காய்ச்சலின் கடுமை மிகுதிப்படாமல், மிகவும் உன்னிப்பாய் அதனைத் தணிவித்தற்குரிய முறைகளை உடனே செய்தல் வேண்டும். எங்ஙனமானாலுங் காய்ச்சல் வருவது உடம்பின் நலத்திற்கே யல்லாமல் வேறில்லை. நன்றாகக் காய்ச்சல் நோய் வந்து போகுமானால் உடம்பிலுள்ள அழுக்கு நீர்களெல்லாம் முற்றுமே ஒழிந்து போய்விடும்.

(௫௦) காய்ச்சல் வருமென்று கண்டவுடனே உணவு உட்கொள்ளுதலை நிறுத்திவிடல் வேண்டும்; ஒருகால் மிகுந்த பசியெடுத்தாற் கஞ்சி வகைகளில் ஏதாவது சிறிது உட்கொள்ளலாம். பசியெடாத வரையில் உணவு சிறிதும் உட்கொள்ளலாகாது. இங்ஙனம் உணவு உட்கொள்ளாதிருக்கவே வயிற்றிலுள்ள பசித் தீயானது தீனிப் பையிலுள்ள தூவா நச்சுப் பொருள்களெல்லாவற்றையும் எரித்து அகற்றிவிடும்.

(௫௧) வெயில் மிகுதியாயிருக்கும் போது வெளியே நடத்தலாவது திரிதலாவது கூடாது; அறிந்தும் திரிந்தால் மூளையில் மயக்கம் ஏறிக் களைத்து வீழ்ந்து உயிரை யிழப்பர். மற்றுக், கட்டாயமாக வெயிலிற் போக நேர்ந்தால், தண்ணீரில் தோய்த்த துணியைப் பிழிந்து ஈரமாகவே அதனைத் தலை யுடம்புகளின்மேற் போர்த்துக்கொண்டு செல்லல் நன்று.

(தொடரும்)

# 15-வது தமிழிசை மாநாடு

கடந்த 21-12-57-இல் இராசா அண்ணாமலை மன்றத்தில் 15-வது தமிழிசை மாநாடு சிறப்பாகத் துவங்கப்பெற்றது. விழாவிற்கு நாமக்கல் கவிஞர் திரு. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினார்கள். திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளையவர்கள் வரவேற்புரை ஆற்றினார். அதுகாலை, கடந்த பதினான்கு ஆண்டுகளாகத் தமிழ் இசைச்சங்கம் வளர்ச்சி பெற்று வரும் வகைபற்றிக் குறிப்பிட்டார்.

அடுத்துத் தமிழிசைக் கல்லூரி மாணவர்களின் இசை விருந்து நடைபெற்றது. பின்னர் அமைச்சர் திரு. எம். ஏ. மாணிக்கவேலர் விழாவைத் துவக்கிவைத்துப் பேசினார். அவர் பேசியகாலை, 'இசை உயர்நிலையை அடையவேண்டுமானால் தாய்மொழி மூலமாகத்தான் அடையமுடியும்'' எனக் குறிப்பிட்டார். பின்னர் நாமக்கல் கவிஞர் தமது தலைமை உரையை நிகழ்த்தினார். அதுகாலை அவர், ''இசை அவரவர் தாய்மொழியில் அமைந்தால் தான் கருத்தில் பதிந்து உள்ளத்தை உருக்கி உணர்ச்சியூட்டும். தமிழ்நாட்டில் தமிழர்களுக்கிடையேயுள்ள வித்துவான்கள் தமிழில்தான் பாடவேண்டும். தமிழ்மொழி இசைக்கு ஏற்றதல்ல என்னும் அறியாமையைப் போக்கவல்லது இந்தத் தமிழிசை இயக்கம்'' எனக் குறிப்பிட்டார் பின்னர்ப் பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி, வித்துவான்கள் எம். எம். தண்டபாணி தேசிகர், கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை ஆகியோருக்குத் தங்கப் பதக்கங்களும் வெள்ளிப் பேழைகளும் வழங்கப்பட்டதோடு இசைப் பேரறிஞர் என்னும் பட்டமும் வழங்கப்பட்டது.


கடந்த 24-12-57-இல் தமிழிசைவிழாவின் பண் ஆராய்ச்சிக் கூட்டம் நடைபெற்றது, அதற்கு நாகர்கோயில் 'தொண்டன்' ஆசிரியர் மகாவித்துவான் ஆறுமுக நாவலர் அவர்கள் தலைமை தாங்கினார். அவர் பேசுகையில் தமிழ் தனித்தன்மை வாய்ந்த தென்றும், ஹரப்பா, மொகஞ்சதாரோ புதை பொருள் ஆராய்ச்சி மூலம் தமிழர்கள் ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்பே இசை வல்லுநர்களாக இருந்தனர் எனத் தெரிவதாகவும், மற்றும் தமிழின் உயர்வு குறித்தும் நீண்டதோரு சொற்பொழிவாற்றினர்.

இசைத்தமிழுக்கு இடைவிடாது பணிபுரிந்து இசைப் பேரறிஞர் பட்டம் பெற்ற இசைவல்லுநர்கட்கு எமது உளமார்ந்த வாழ்த்தினைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இசைப் பேரறிஞர்கட்கு எல்லாம்வல்ல இறைவன் நீண்ட ஆயுளைத் தந்து அருள் புரிவாராக! வாழ்க தமிழிசை! வளர்க தமிழ்!

## 15-வது தமிழிசை விழா (21-12-1957)



இடமிருந்து: டி. எம். நாராயணசாமி பிள்ளை, எம். எம். தண்டபாணி தேசிகர், நாமக்கல் கவிஞர், மாணிக்கவேலர், ராசமாணிக்கம் பிள்ளை, புரபுசர் பி. சாம்பமூர்த்தி. தடித்தஎழுத்தில் உள்ளவர்கட்கு ''இசைப் பேரறிஞர்'' பட்டம் வழங்கப்பட்டது.



மேடை தளவாய்

தி. குமாரசாமி முதலியார்

# தளவாய் வழித் தலைவர் மேடை தளவாய்

# தி. குமாரசாமி முதலியார் மறைவு

ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னர் விசயநகர மன்னராகிய கிருஷ்ணதேவராயர் ஆட்சி, தென்னாட்டில் பரவிய காலத்தில் அவரது படைத் தலைவராக விளங்கியவர் நாகம நாயக்கர் என்னும் நல்வீரராவர். அவருடைய பேராதரவைப் பெற்றுப் பெருமை உற்றவர் தளவாய் அரியநாயக முதலியார் என்னும் அறிஞர். அவர் காஞ்சிமாநகரைச் சார்ந்த மெய்ப்பேட்டில் மிகவும் எளிய குடும்பத்தினராகிய காளத்தியப்ப முதலியாருக்கும் சிவகாமியம்மையாருக்கும் மகவாகப் பிறந்தவர்.

அவர் ஆறுமாதக் குழந்தையாகத் தரையில் கிடக்கும் போது விடநாகம் ஒன்று அவர் அருகில் போந்து படமெடுத்து ஆடி வலமாகச் சூழ்ந்து சென்றது. அதனைக் கண்ணுற்ற அன்னை கலங்கிநின்ற காலை, அங்கு வந்த தந்தையார் செய்தியறிந்து சிந்தைகளிகூர்ந்து 'நம் மகன் நாடாளும் தலைவனாவான்' என்று கூறி மனைவியைத் தேற்றினர். அன்றே 'அரிய நாயகம்' என்று பெயரிடப் பெற்ற சிறுவர் பதினைந்து ஆண்டிற்குள்ளாகவே தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகிய மும்மொழிகளிலும் புலமைபெற்று மதிநுட்பம் நூலோடுடையவராய் விளங்கினர். அவர் பெரியார் பலர் தூண்டுதலாலும் வேண்டுதலாலும் விசய நகரம் சார்ந்து, படைத் தலைவராகிய நாகம நாயக்கரைச் சந்தித்தனர். அன்றுமுதல் அவர்பால் மறைந்து கிடந்த மாண்புறு திறமைகள் எல்லாம் ஒவ்வொன்றாக வெளிப்படலாயின. அதன் பயனாக விசயநகர மன்னர் ஆட்சியில் தென்மண்டல ஆட்சித் தலைவராக விளங்கிய நாகம நாயக்கரின் மதியமைச்சராகவும் படைத் தலைவராகவும் பணியாற்றும் பெருமை பெற்றார் அரிய நாயகர். அவரது போர்த் திறமையைக் கண்டு வியந்தே நாயக்கர், 'தளவாய்' என்ற தனிப்பெரும் பட்டத்தை வழங்கினர்.

தளவாய் அரிய நாயக முதலியாரின் ஆட்சித் திறனைக் கண்ணுற்ற நாகம நாயக்கரின் மகனாகிய விசுவநாத நாயக்கர் திருநெல்வேலிப் பகுதியைத் தலைமை பூண்டு ஆட்சிபுரியுமாறு அவரைத் திருநெல்வேலிக்கு அனுப்பினர். அவரே திருநெல்வேலி மாவட்டத்தில் பல்வேறு பாளையங்களை அமைத்து, அவற்றைத் தனித்தனிப் பாளையக்காரர் ஆட்சியில் இயங்குமாறு செய்தார். அவர்களே சமீன்தார்கள் எனப்பட்டனர். அவர்கள் எல்லோரும் ஆண்டிற்கு ஒரு முறை திருநெல்வேலிக்கு வந்து, தளவாய் முதலியாரைப் பணிந்து கப்பம் கட்டிச் செல்லுதல்வேண்டும். அவரது அரண்மனை முற்றத்தில் அமைந்த சேறு நிறைந்த

பள்ளத்தில் கோடியாடை விரித்து அதன்மேல் படுத்துச் சாட்டாங்க வணக்கம் செலுத்தியே தளவாய் முதலியாரைப் பேட்டி காணுதல்வேண்டும். அங்ஙனம் ஆட்சித்திறன் பெரிதும் படைத்த தளவாய் மரபு சென்ற நூற்றுண்டுவரை அச் சிறப்பைக் காத்துவந்தது. ஆங்கிலேயர் காலத்திலும் தளவாய் மரபினருக்குத் தனிப்பட்ட சிறப்புக்கள் இருந்துவந்தன.

தளவாய் மரபின் முதல் மகனுகிய அரியநாயக முதலியார் காலந்தொட்டுத் தமிழகத்திலும் பாரத நாட்டிலும் ஏற்பட்ட பல்வேறு ஆட்சிகளுக்கு இடையேயும் வாழையடி வாழையாக வரும் பழங்குடி மாண்பைக் காத்துத் திறமையுடன் வாழ்ந்து வரும் பெருமையான மரபில் சென்ற நூற்றுண்டில் சிறந்து விளங்கிய செம்மலார் இராவ்சாகிபு மேடை தளவாய் திருமலையப்ப முதலியார். அவர் அறங்கிடந்த நெஞ்சும், அருள் ஒழுகு கண்ணும், திறங்கிடந்த திண்டோள் வலியும் கொண்டவர்; அறக்கொடை பல புரிந்தருளிய அருளாளர். அன்னார்க்கு அரங்கநாதன், குமாரசாமி, சண்முகக் குமாரசாமி, இராமலிங்கம் என்ற ஆண்மக்கள் நால்வரும் அலர்மேலு அண்ணி என்னும் பெண்மகள் ஒருத்தியுமாக மக்கள் ஐவர் பிறந்தனர். ஆண் மக்கள் நால்வருள் இரண்டாமவராகத் தோன்றிய மேடை தளவாய் குமாரசாமி முதலியார் அவர்களே அண்மையில் 25-12-1957-இல் மறைந்தனர். 14-7-1897-இல் தோன்றிய தளவாய் குமாரசாமி முதலியார் அவர்கள் தமது அறுபத்தோராவது ஆண்டில் உயிர்நீத்தனர். பல்வகை ஏற்றத்தால் தளவாய் மரபின் தனிமாண்பைக் காத்த கடைசிப் பெருமகனுர் இவரே.

அண்மையில் மறைந்த ஆண்மையாளராகிய தளவாய் குமாரசாமி முதலியார் அவர்கள் உருவத்தால் பருத்துயர்ந்த பெருந்தோற்றம் படைத்தவர். களிறுபோன்ற பெருமிதமான நடையுடையவர். சிங்கவேறெனமுழங்கும் கம்பீரமான குரலுடையவர். எத்தகைய ஆற்றலுடையாரையும் அடங்கிப் பணிய வைக்கும் அரிய தோற்றமுடையவர். அஞ்சாத நெஞ்சம் கொண்டவர். தம்மைச் சரண் புகுந்தாரை அரணுக நின்று காக்கும் உரம்படைத்தவர். எதனையும் எண்ணித் துணியும் திண்ணிய நுண்ணறிவாளர். எடுத்த காரியத்தைத் தொடுத்து வெற்றியுற முடித்து வீறுகொள்ளும் பேராற்றல்கொண்டவர். தளராத ஊக்கமுடையவர். சலியாத உழைப்புடையவர். பொதுநலப் பணிகட்கென்றே தம் உறுதியான உடம்பை ஒப்பித்தவர். அவர் கார் வண்டிகளில் அமர்ந்துசெல்லும் காட்சி காண்பதற்கே வியப்பை அளிப்பது. அவர்களைப்போல் அமர்வதற்கு எத்தனை நாட்கள் முயன்று பயின்றுலும் பிறர்க்கு முடியாது.

வழிவழியாக இருந்துவரும் குடிப்பெருமையுடன் இயற்கையாக அமைந்த நுண்ணிய அறிவும் திண்ணிய ஆட்சித் திறமையும் பெற்று விளங்கிய தளவாய் குமாரசாமி முதலியார் அவர்களைச் சென்னை மாநிலத்தில் தேடியடையாத பதவி எதுவுமேயில்லை. மாநில அரசின் மேல்சபை உறுப்பினராகத் தொடர்ந்து பல்லாண்டுகள் விளங்கினர். திருநெல்வேலி மாவட்டப் பேரவைத் தலைவராகப் பலகால் விளங்கி அரும்பணிகள் பலவற்றைத் திறம்படச் செய்தனர். நகர்மன்ற உறுப்பினராக விளங்கி நற்பணியாற்றினர். திருச்செந்தூர், திருநெல்வேலி நகரங்களிலுள்ள திருக்கோவில் அறநிலையங்களின் அறங்காப்பாளர் குழுத் தலைவராக விளங்கிச் சமயப்பணிகள் பல ஆற்றினர். நெல்லையிலுள்ள கல்லூரி, கலாசாலைகளின் ஆட்சித் தலைவராக விளங்கிக் கலைப்பணிகள பல புரிந்தனர். தென்னிந்திய பாங்கியின் ஆட்சித் தலைவராக அரும்பணியாற்றினர். சென்னை இராச்சியக் கூட்டுறவுப் பாங்கியின் தலைவராக வாழ்நாள் இறுதியில் தொண்டாற்றினர். இன்னும் நெல்லையைச் சார்ந்த பல்வேறு பகுதிகளிலும் சென்னை மாநில முழுதுள்ள கூட்டுறவுத் தொடர்புடைய பல்வேறு நிறுவனங்களின் ஆட்சியிலும் பங்குகொண்டு புகழ் பொங்குமாறு நாணயத்துடனும் நாநயத்துடனும் நலமான பணிகளைத் தம் வாழ்வின் இறுதி நாள்வரை ஆற்றிவந்த உறுதியான உள்ளமுடைய வள்ளல்கோமானாகிய மேதை தளவாய் குமாரசாமி முதலியார் அவர்கள் மறைவு தமிழகத்திற்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். அவர்கள் மறைவுநாளில் மனங்கலங்கி உரையாற்றிய அறிஞர்கள் பலருள் ஒருவர் 'தமிழகத்தின் பெரிய மலையொன்று சாய்ந்தது' என்று குறித்தார். மற்றொருவர் 'தமிழன்னையின் வீரப்பெருமகன் ஒருவர் மறைந்தார்' என்று உள்ளங் கரைந்தார். 'நீதியும் ஆண்மையும் ஒருருக்கொண்ட உத்தமர் மறைந்தார்' என்று சித்தங்கலங்கினார் ஒருவர். 'தோற்றத்தால் யானையையும் ஏற்றத்தால் சிங்கத்தையும் ஒத்த உயர்மகன் ஒருவர்' மறைந்தார் என்று உருகினார் இன்னொருவர்.

இங்ஙனம் மக்கள் மனம் கவர்ந்த மாண்பினராகிய தளவாய் குமாரசாமி முதலியார் அவர்கட்குச் செல்லம்மாளண்ணியார், வள்ளியம்மையண்ணியார் என்னும் இரு மனைவியர். வள்ளியம்மையண்ணியார்க்கு ஆண்மக்கள் மூவரும் பெண்மகள் ஒருத்தியும் உள்ளனர். இவருள் மூத்தவராகிய மேதை தளவாய் திருமலையப்ப முதலியார் பி.எஸ்ஸி., பி.எல். இளவழக்கறிஞராக விளங்கிவருகின்றார்.

---

# ஐவேல் அசதிக் கோவை

[பண்டித. திரு. அ. கந்தசாமி பிள்ளை அவர்கள்]

'கோவை நூல்' என்பது, நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும், பாடல்சான்ற புலனெறி வழக்கத்தின்பாற்படும் அகப்பொருட்டுறையின்மேல் 'காட்சி' முதல் 'ஊதியம் எடுத்துரைத் தூடறீர்த்தல்' ஈறுகக் கூறும் கிளவிகளையுடையதாய், காதலின் ஆழம், அன்பின் பெருமை, மடவார் கற்பு, மாந்தர் நல்லியல்பு முதலியனவற்றை விளக்கிப் பாட்டுடைத் தலைவனது பெருமைகளைப் புலப்படுத்தி ஒன்பான் சுவையும், எண்வகை மெய்ப்பாடுந் தோன்றத் தொல்லியல்வழாமற் கற்றோர் புனையும் பெற்றியதாகும்.

அவைதாம் திருச்சிற்றம்பலக்கோவை, திருவாரூர்க்கோவை எனப் பாட்டுடைத் தலைவனது ஊர்பற்றி வருவனவும், குலோத்துங்கன் கோவை, வல்லாளன் கோவை எனத் தலைவன் பற்றி வருவனவும், தஞ்சைவாணன் கோவை, கப்பல்கரு மாணிக்கன் கோவை எனத் தலைவனது ஊரும் பேரும் பற்றி வருவனவும், பிறவாறு வருவனவும் ஆகும். இவற்றுள் பாட்டுடைத் தலைவனது ஊரும்பேரும் பற்றிய பெயருடையதாகும் இங்கு எடுத்துக்கொண்ட ஐவேல் அசதிக் கோவை என்பது.

இது, ஐவேல் என்னும் ஊரில் வாழ்ந்துவந்த அசதி யென்னும் வள்ளல்மேல் பாடப்பட்ட கோவையென்னும் நூல் என்பது இதன்பொருளாம்.

ஐந்து வேலமரங்களை யுடைமையின் இவ்வூர் ஐவேல் என்னும் பெயர்பெற்றதாகும். இவ்வாறே ஆறும்புளி, இரு விளாச்சேரி என எண்ணடுத்த மரம்பற்றியும், விளாத்திகுளம் என எண்ணின்றி மரம்பற்றியும் ஊர்கட்குப் பெயர் வழங்குமாறு அறியற்பாலது. இவ்வூர் ஐவேலி என்றும் குறிக்கப்படும்.

இவ்வூரைப்பற்றிக் கொங்குமண்டல சதகம் உரையில் "இந்த ஐவேலி யென்பது சங்ககிரி மிட்டா[1]வைச் சார்ந்த பாகமாக இருக்கிறது. அரசுரிமைப் பதிவிலும் ஐவேலிக் கிராமம் எனப் பெயர் இருந்துவருகிறது. ஆனல் ஊர் நத்தமாகப் போய்விட்டது என்றாலும் அவ்விடத்தை அடுத்து இடையா வீடுகள் மாத்திரம் ௨00 உள்ள இடையர்பாடி என ஓர் ஊர் இருக்கிறது,"

1. மிட்டா என்பது சிறுசமீன்.

எனத் திருச்செங்கோட்டு முத்துசாமிக்கோனார் அவர்கள் குறிப்பிடுகின்றனர் (கொங்குமண்டல சதகம் பக்கம், ௪௭).

நகைச்சுவையுடன் அசதியாடி எவரோடும் பேசும் இயல்பினனாக இத் தலைவன் இருந்ததனால் இவன் இயற்பெயர் மாறி, அனைவரும் இவனை அசதி யென்றே அழைக்க, அதனால் இப் பெயர் அவனுக்கு ஆயிற்றாதல் வேண்டும். அதனால் இவன் பெயரும் ஊரொடு சார்த்தி மாங்குடி மருதனார், பிசிராந்தையார் என்பனபோல ஐவேல் அசதி யென வழங்கியதாகும்.

இவன் ஆயர்குலத் தலைவன், ஆன்நிரை ஓம்பல் சீரிய தருமம் என்று பன்னூறு பசுமந்தைகளை வைத்துப் போற்றி, மாந்தர்க்குப் பலவிதத்தும் உபகாரியாய் இருந்தவன், ஏழை எளியவர்க்கு ஒரு பற்றுக்கோடானவன், பெருஞ் செல்வன், கொடையாளி, பெரும்புகழ் பெற்றோன் என்று அறியப்படுகிறான். அதனோடு ஒரு தெய்வத்தின் உபாசனையால், எவ்விடத்தும் தோல்வியடையாதவாறு வரம்பெற்றவனென்றும், அக்கினி வசியம் என்னும் ஒரு மந்திர சாதனையால் அழற்கட்டுக் கட்டும் வன்மையுடையோன் என்றும் சான்றுகளால் அறியப்படுகிறான்.

சான்றுகளாவன : ஆயர்தம் ஐவேல் அசதி, ஆய்ப்பாடி ஆயர்தம் ஐவேல் அசதி, ஆறாயிரங்கொண்ட ஐவேல் அசதி, பசுக்காவல் மிக்கெனச்செய்யும் அன்பன், ஆடுங்கடைமணி ஐவேல் அசதி, சேனைத்தலைவனைச் செங்கோல் அசதியை, அற்றாரைத் தாங்கும் ஐவேல் அசதி, ஆலவட்டப்பிறை ஐவேல் அசதி, அழியா வரம்பெற்ற ஐவேல் அசதி, அழற்கட்டுக் கட்டிய ஐவேல் அசதி என்பன.

இத்தகையோன் ஒருநாள் தன்விளைபுலத்திருந்தனனாக, அதுசமயம் தன்னைக்காண அங்குவந்த ஒளவையார் மிகப் பசியோடிருத்தலை யறிந்து, தனக்கு வந்த காலையுண்டியை முழுதும் ஒளவையாருக்கு ஈந்து உண்பித்துப் பின் வேறு சிற்றுண்டி கொணர்வித்துத் தானும் உண்டு அவரோடு அளவளாவி இருக்கையில், அவனது பன்மாண் குணங்களையும் பாராட்டி, அச் சிற்றுண்டியே பரிசிலாகப் பிறிதொரு கைம்மாறும் கருதாது இக் கோவைநூலை ஒளவையார் பாடினார் என்ப. இங்கு ஒளவைக்களித்த உண்டி கூழ் எனவும் கூறுவர். கூழ் என்பது எளியோர் உணவு. 'குடிப்பது கூழ், கொப்பளிப்பது பன்னீரா?' என்னும் பழமொழியாலும் உணர்க. இதனால் கூழுக்குப் பாடி எனப் பெயர் ஔவையாருக்கு வழங்குதலும் உண்டு.

நூறாயிரம் பொற்காசும், ஒரு மலைமீது ஏறிக் கண்டுகொடுத்த நாடும் பரிசிலாக, ஒரு பத்துப்பாட்டுப் பாடின புலவரும்,

(கபிலர் பாடிய எ-ஆம் பதிற்றுப்பத்து) ஒரு பாட்டுக்கு ஒரு பொன்தேங்காய் வீதம் நானூறு பொன்தேங்காய்களுக்கு நானூறு பாடல்கொண்ட தஞ்சைவாணன் கோவை பாடின பொய்யாமொழிப் புலவரும் (பாண்டிமண்டல சதகம்) உளராகக், கூழே பரிசிலாக வேறு கைம்மாறு ஒன்றுங் கருதாது கோவை என்னும் பிரபந்தம் பாடினர் என்றால், ஔவையாரது செய்ந் நன்றி யறிதல் எவ்வளவு மாண்புடையது என்பது போதரும். இதனையும் பின்வரும் சோமேசர் முதுமொழி வெண்பா புலப்படுத்துகிறது.

"பன்னும் அசதிநன்றி பாராட்டிக் கோவைநூல்
சொன்னளே ஔவைமுனம் சோமேசா—மன்னும்
தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வார் பயன்தெரி வார்."

செவிவழியாக வரும் இவ் வரலாறு இங்ஙனமாக, இதனை எழுத்தில் அமைத்து நாட்டினர் புலவர் புராணமுடையார். அவர் கூறுவன :

இவன் தென்பாண்டிநாட்டின னென்றும், ஓர் ஆட்டிடைய னென்றும், தன்பால் உணவிரந்த ஔவையாருக்கு ஆட்டுப் பால் கலந்த கூழ் அருத்தி மிகவும் உபசரிக்க, அதை மனங் கொண்டு ஔவையார் 'நின்பெயர் யாது' எனக் கேட்க, தன் பேர் மறதியாயிருக்கிறது என்னலும், ஊரையாவது கூறுக எனக்கேட்க, 'பேரை மறந்தவன் ஊரையா அறிவான்,' ஐந்து விரலைக் காட்டிக் கருவேலிமரம் உடையது எனவும் குறிப்பால் கூற, அதுபற்றி 'ஐவேல் அசதிக் கோவை' என நூலியற்றி, அதனைச் சிதம்பரத்தில் நடராசப்பெருமான் திருமுன் அரங் கேற்றி, ஊர்கள்தோறும் பள்ளிக்கூடங்களில் பயில்விக்குமாறு ஔவையார் அந்நூலைப் பரப்பினர் என்று கூறுவர். (புலவர் புராணம், ஔவையார், ௧௧௫ - ௧௧௯ பாடல்கள் அனுபந்தத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.) இந்நூலார் 'மறதி' என்பதற்கு அசதி என்னும் வழக்குத் தென்பாண்டிநாட்டில் உள்ளமையால் தென் பாண்டிநாட்டினன் என்று கூறுகிறார்.

இனி, இவனைப்பற்றிய பாடல்கள் சோமேசர் முதுமொழி வெண்பாப் பாடல் ஒன்றும், நந்தமண்டல சதகப் பாடல் ஒன்றும், கொங்குமண்டல சதகப் பாடல் ஒன்றும் ஆகும். இவைதவிர ஐவேல் அசதிக்கோவையில் எமக்குக் கிடைத்த முழுப்பாடல்கள் ஏழும் குறைபாடல் ஒன்றும் ஆக எட்டுப் பாடல்களாகும். இவைகொண்டே முதற்கண் கூறிய வரலாறு அமைக்கப்பட்டது. அன்றி, தன் பேரினையும் ஊரையும்

மறப்பான் ஒருவன் இருப்பான் என்பது முற்றிலும் நம்பத்தகாத செய்தியாகும்.

அசதி ஔவைக்களித்த உணவு கூழ் என்பதாகும். காலை உணவாகப் பெருஞ்செல்வனாகிய அவன் பல சுவைப்பொருள்களோடு உண்பவனாக வேண்டும். அது இக்காலத்தில் மலை நாட்டார் உண்ணும் பற்பல சுவைப்பொருள்களோடு கூடிய காலை உணவைப் போன்றதாகும். இவ் வுணவை ஔவைக்கு இரவில் அளித்ததாக "நந்தமண்டல சதகம்" கூறுகிறது.

முடிவுரை: எவரோடும் அசதியாடிப் பேசுவதால் இவனது இயற்பெயர் மாறி, பிற்பட்டு அசதி யென்னும் பெயர் வாய்ந்தவனாக வேண்டும். இவனது ஊர் அழிந்ததாயினும் ஐவேலிக் கிராமம் என அரசினர் பதிவில் உள்ளது என்பதும், அதை அடுத்து உ௦௦ இடையர் குடிகள் உள்ள இடையர்பட்டி என்னும் ஊர் உள்ளதென்பதும் அறியத்தக்கது.

இவ் வள்ளல் 'கூழ்' என்னும் காலை உணவைப் பல சுவை உணவுப்பொருள்களோடு ஊட்டி உபசரித்ததைப் பெரிதும் பாராட்டித் தனது செய்ந்நன்றி அறிதலை,

"உதவி வரைத்தன்று உதவி செயப்பட்டார்
சால்பின் வரைத்து."

என்னும் திருக்குறளுக்கு இலக்கியமாகக் காட்ட எண்ணி ஔவையார் இக்கோவை நூலை அசதியின்மேல் பாடினார். இக்கோவையின் செய்யுட்கள் க்ஷீரபாகமாகவும் திராக்ஷாபாகமாகவும் யாவரும் எளிதில் உணர்ந்து மகிழுமாறு நகைச்சுவை முதலிய மெய்ப்பாடுகளுடன் பாடப்பட்டதாகும். எமக்குக் கிடைத்த இக்கோவையின் பாடல்கள் அகர, ஆகார எழுத்துக்களை முதற் கொண்டவையாக உள்ளன. நூல் முழுதும் கிடைப்பின் இன்னும் பல செய்திகள் அறிய இயலும்.

# அனுபந்தம்

அருஞ்சஞ் சலங்கொண்ட ஐவேல் அசதி அணிவரைமேல்
இருஞ்சஞ் சலஞ்சொல்ல வேண்டுங்கொ லோஎன தன்னைமொழி
தருஞ்சஞ் சலமுந் தனிவைத்துப் போனவர் சஞ்சலமும்
பெருஞ்சஞ் சலங்கொண்டு யானிருந் தேனொரு பெண்பிறந்தே. (க)

அலைகொண்ட வேற்கரத் தைவேல் அசதி அணிவரைமேல்
நிலை கொண்ட மங்கைதன் கொங்கைக்குத் தோற்றிள நீரினங்கள்
குலையுண் டடியுண்டு கையினில் எற்றுண்டு குட்டுமுண்டு
விலையுண டடியுண்டு கண்ணீர் ததும்பவும் வெட்டுண்டவே. (உ)

அறங்காட் டியகரத் தைவேல் அசதி அணிவரைமேல்
நிறங்காட்டுங் கஞ்சத் திருவனை யீர்முக நீண்டகுயிழ்த்
திறங்காட்டும் வேலுஞ் சிலையுங்கொல் யானையுந் தேருங்கொண்டு
புறங்காட் டவுந்தகு மோசிலைக் காமன்றன் பூசலிலே. (௩)

ஆடுங் கடைமணி ஐவேல் அசதி அணிவரைமேல்
நீடுங் கயற்கண்ணி யாள்தந்த ஆசை நிகழ்த்தரிதால்
கோடுங் குளமும் குளத்தரு கேநிற்கும் குன்றுகளும்
காடுஞ் செடியும் அவளாகத் தோன்றுமென் கண்களுக்கே. (௪)

ஆரா யிரங்கொண்ட ஐவேல் அசதி அணிவரைமேல்
நீராய மோடு நெறிதனி லேஅந்தி நேரத்திலே
சீரான குங்குமக் கொங்கையைக் காட்டிச் சிரித்தொருபெண்
பேரான் பிடிபிடி யென்றே நிலவும் புறப்பட்டதே. (௫)

அற்றாரைத் தாங்கிய ஐவே லசதி அணிவரைமேல்
முற்றா முகிழ்முலையாள் எங்ஙன் சென்றனள் முத்தமிழ்நூல்
கற்றார் பிரிவுங்கல் லாதார் இணக்கமும் கைப்பொருளொன்
றற்றார் இளமை உடையார் முதுமையும் ஆம்சுரத்தே. (௬)

அழியா வரம்பெற்ற ஐவேல் அசதி அணிவரைமேல்
தெழியா உரம்பெற்ற சேயிழை யாள்தன் திருப்பவளம்
மொழியா யிரம்பொன் முகமா யிரம்பொன் முகத்திலங்கும்
விழியா யிரம்பொன்முலையா யிரண்டும் விலையிலவே. (௭)

அழற்கட்டுக் கட்டிய ஐவேல் அசதி அணிவரையின்
மழைக்கட்டுக் கட்டிய மாளிகை மேலொரு மங்கைநல்லாள்
உழக்கிட் டுரியிட்டு முவ்வுழக் கிட்டுரி நாழியிட்டுக்
குழற்கட் டவிழ்த்துட னங்ஙனின் றேமயிர் கோதினளே. (௮)

ஆலவட் டப்பிறை ஐவேல் அசதி அணிவரைமேல்
நீலவட் டக்கண்கள் நேரொக்கும் போதந்த நேரிழையாள்
மாலைவிட் டுச்சுற்றி வட்டமிட் டோடி வரவழைத்து
வேலைவிட் டுக்குத்தி வெட்டுவ ளாகில் விலக்கரிதே. (௯)

ஆய்ப்பாடி யாயர்தம் ஐவேல் அசதி அணிவரையில்
கோப்பாம் இவளெழிற் கொங்கைக்குத் தோற்றிபக் கோடிரண்டுஞ்
சீப்பாய்ச் சிணுக்கரி யாய்ச்சிமி ழாய்ச்சின்ன மோதிரமாய்க்
காப்பாய்ச் சதுரங்க மாய்ப்பல்லக் காகிக் கடைப்பட்டவே. (௧௦)

# சேக்கிழார் புராணநடை

[திரு. ச. கணபதி முதலியார், எம். ஏ., எல். டி.]

(செல்வி, சிலம்பு - ௩௨, பரல் - ௪, ௧௧௨-ஆம் பக்கத் தொடர்ச்சி)

'நிலவு லாவிய நீர்மலி வேணியன்' என்ற இரண்டாவது அடியில் வல்லோசை யாதும் வந்திலது, அஃது இறைவனது கருணைப்பெருக்கை எடுத்துக்காட்ட வந்த அருளடியாதலின் என்க. இம் முதற்செய்யுள் எழுபத்திரண்டு எழுத்துககளால் ஆயது என்பர். அவ் வெண்ணிலை அறுபத்து மூன்று தனி அடியார்களைப்பற்றியும் ஒன்பது தொகை யடியார்களைப்பற்றியும் கூற எழுந்தது இப் புராணம் என்பதைக் குறிக்கும் என்பதுமாம். 'வாழ்த்தி வணங்குவாம்' என்ற சொற்களின் இறுதி வைப்பு முறை வாக்குவழிபாட்டையும், காயவழிபாட்டையும், உப லக்கணம் எனும் இலக்கணம்பற்றி நினைத்தலாகிய மனவழி பாட்டையும் குறிக்குமென்பதும் சிந்திததற்குரியது. 'சிலம்பு வணங்குவாம்' என்ற சொற்றொடரில் சிகர வகரங்கள் நிற்றலால் 'சிவ' என்ற சுருக்க ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதியதூஉங் காண்க.

இம் முதற் செய்யுள் நாற்சீரான் அமைந்த கலிவிருத்தம். அஃது நாயன்மார்கள் சரியை, கிரியை, யோகம் ஞானம் எனும் நாற்பாதத்தை வீட்டுநெறி எனக் கொண்டார்கள் என்பதைக் காட்டும் என்பதூஉம் உண்மை. முதலடி இறைவனது அளவி லாற்றலையும், இரண்டாவதடி அவனது கருணை வெள்ளத்தையும், மூன்றாவதடி அவனது அருளொளி நடனத்தையும், நான்காவது அடி உலகத் தோற்றத்திற்குக் காரணமாகிய அருள்நாத மூல ஒலியாகிய ஓங்காரத்தையும் சுட்டி நிற்பதை மனத்தில் கொள்க. 'உலகெலாம்' என்ற இச் செய்யுளின் முதலடி, மூன்றாமடி, நான்காமடி ஆகிய அடிகளில் உகரம் அகரம் மகரம் ஆகிய பிரண வாங்கங்களை அமைத்திருத்தலையும் ஓர்க. அப் பிரணவ மந்திரப் பொருளை குருவாயிலாகப் பெறுதல் வேண்டும் எனுங் கருத்தை உணர்த்துவாராய் அவ் வுறுப்புக்களை அச் சொற்களை முறை பிறழவைத்தார் என்ற நுண் கருத்தையும் அறிக. இத்துணை நுட்பங்களை யெல்லாம் எழுபத்திரண்டு எழுத்துக்களில் வைத்துச் சொல்லிய சேக்கிழாரின் சொல்லமைப்புத் திறனை யாவரே எடுத்தியம்பவல்லார்! சொற் சுருக்கமும் பொருட் பெருக்கமும் செறிந்து கிடக்கும் இச் செய்யுள் நடை வியத்தற் குரியதொன்று.

'உலகெலாம்' எனுஞ் சொற்றொடர் அருள் தாண்டவ அண்ணலாரின் அருட்டிரு மொழிகள். கனகசபை முதல் கொடுத்தருள அதனையே முதற் செய்யுளில் முதல் தொடராக வைத்துப் புராணத்தைப் பாடினார் அருள்மொழித் தேவர். அத் தொடரின் சொல்லொணு மாண்பினை, கடவுட்டன்மையை யாண்டும் மறந்தாரிலர். திருஞான சம்பந்தர் புராணத்தில்,

"ஐந்தெழுத்
தோதி யேறினா ருய்ய உலகெலாம்."

என்று உகசு-வது செய்யுளில் வைத்தும்,

"வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி யுலகெலாம்."

என்று புராண இறுதிப்பாட்டில் வைத்துப் பாராட்டியது மேற் கூறிய கருத்தை அரண் செய்வதாகும்.

சொல்லமைப்பு நெறியில் சொற்களை வெளிப்படைப் பொருளும் உள்ளுறைப் பொருளும் தோன்றும் வண்ணம் இருபொருள் படும்படி அமைக்குந் திறன் சேக்கிழார்க்கு உண்டு என்பதற்கு அடியில் சில சான்றுகள் தருதும்: ஒரு மணத்தைத் தடுத்து இருமணத்தைக் கூட்டுவிக்கக் கைலை நாயகன் தண்டொரு கையிலும் ஆவணம் மற்றொரு கையிலு மாக முதுமறையோன் கோலத்தோடு வந்தபொழுது சுந்தரர் ஒரு அந்தணன் பிறிதொரு அந்தணனுக்கு அடிமையாதல் யாங்ஙனம் என்று ஓலை பற்றிக் கிழித்திட்டார். அஞ்ஞான்று சுந்தரரைத் தடுத்தாட்கொள்ள வந்த முதியசிவனார் சுந்தரரோடு பல்லாற்றானும் வழக்காடினார். அப்பொழுது சுந்தரர் அவரை நோக்கிக் கூறுவதாகச் சேக்கிழார் கூறும் கூற்றில் இருபொருள் தொனி இருப்பதைக் குறிக்கொள்மின். "பழைய மன்றாடி போலும் இவன்" என்று சுந்தரர் வாக்கில் வைத்துப் பேசு கிறார் சேக்கிழார். 'பழைய மன்றாடி' என்பதற்கு இம் முது மறையோன் 'நீண்ட நாளாக வழக்காடுவதையே தொழிலாகக் கொண்டவன் போலும்' என்பது வெளிப்பொருளாம். அடுத்து 'தில்லைத் திருச்சபையில் (மன்றுள் ஆடி) அருட் கூத்தியற்றும் நடேசப் பெருமானே தன்னுருக் கரந்து மானுட சட்டை தாங்கி ஆட்கொள்ள வந்தான் போலும்' என்பது உள்ளுறைப் பொருளாம். மன்றினுள் எடுத்த பொற்பாதத்தோடு ஆடு கின்ற சிவனே என்னை மலக்குழியினின்றும் எடுத்து ஆட் கொள்ள வந்தான் போலும் என்று சுந்தரர் முன்னை உணர்வு கொண்டு பேசுவதாகவும் கருதுவதற்கு இடனுண்டு.

வழக்கு முடிந்த பின்றை நடுவணர்களாகிய திரு வெண்ணெய் நல்லூர் அந்தணர்கள் "உமது வீடும் நீடு வாழ்க்கையும் யாண்டுளது"? என்று வினவுழி, 'என்னை ஒருவரும் அறியீராகில் போதும்' என்று திருவருட்டுறை புக்கார். இவ்வடியில் 'என் இருக்கை உங்களில் எவர்க்கும் தெரியவில்லை என்றால் இதோ போகின்றேன்' என்ற பொதுப் பொருளும், அம்பலத் தாடுகின்ற முழுமுதலாகிய நானே நஞ்சுந்தரனை ஆட்கொள்ள இவ்வுருத்தாங்கி, வந்தேன் என்பதை நீங்கள் அறியவில்லையாயின் ஈதோ கோயிலினுட் போய் மறைகின்றேன்' என்ற குறிப்புப் பொருளும் அமைந்திருத்தலை அறிமின்.

பன்முறை தோற்றுப்போய்ப் பரிபவப்பட்டுப்போன முத்தி நாதன் மைபொதி விளக்கே யென்ன மனத்தினுள் கறுப்பு வைத்து அற்றத்தில் வெல்வான் மெய்ப்பொருள் நாயனார்பால் சென்று 'எங்குமில்லாத தொன்று கொடுவந்தேன்' என்றான். இவ்வடி இருபொருள் பயக்குமாறு நிற்றலைக் காண்மின். 'உங்கள் நாயகனார் பார்க்கும் உரைசெய்யா ஆகம நூல் ஒன்றினை உரைசெய்ய உனக்காகக் கொண்டு வந்துள்ளேன்' என்பது வெளிப்படைப்பொருள். 'எவ்விடத்திலும் யாரும் செய்தற் கியலாத கொலைத் தொழில் புரியக் கருவி ஒன்று மறைவில் கொண்டு வந்துள்ளேன்' என்பது குறிப்புப் பொருள். நினைத்த கொடுந் தொழிலை நினைத்த வண்ணம் செய்ய எண்ணிய இகலில் வெல்லுமாற்றான் 'நானும் நீயும் வேறிடத் திருத்தல் வேண்டும்' என்று வேண்டினான். இவ்வடியின் கண்ணும் இரு பொருள் பொருந்தி இருப்பதை விளக்குதும்: 'சிவன் உரைத்த ஆகம நூல்களுள் நான் கொண்டுவந்தது உன்னை அன்றி வேறெவர்க்கும் கிடைக்கத் தகுவதன்று. அதனை நீ ஒருவனே கேட்கற்பாலன். ஆகவே உன் தேவியும் உன்னோடிருத்தல் தகாது. நானும் நீயுமே தனித்திருத்தல் வேண்டும்: வேறெவரும் உடனிருத்தல் கூடாது என்பது பொதுப்பொருள். 'வேறிடத் திருத்தல் வேண்டும்' என்பது மற்றொரு பொருளையும் குறிப் பில் சுட்டி நிற்கின்றது என்றும் கற்றறி புலவர் கழறுவர். 'நான் சூழ்ச்சியால் உன்னைக் கொல்லப் போகின்றேன். நீயோ அன்பர் வேடமே மெய்ப்பொருள் என்று சிந்தை செயும் மெய்த் தொண்டன். உன் சிவ புண்ணியச் செயலால் நீ அடைய இருப்பது அழியா இன்ப வீடு; நான் செய்யப்போகும் சிவ அபராதச் செயலால் அடைய இருப்பது அருநரகு. இரண்டு பேர்களும் உயிர் போன பின்றை வெவ்வேறிடத்தில்தான் இருப்போம்' என்பது குறிப்பிற் போந்த சிறப்புப் பொருள் எனினுமாம்.

அமர்நீதி நாயனார்பால் இறைவன் கோவணக் கள்வ ரானார். எல்லாம் தான் வைத்து வாங்க வல்லானாகிய இறைவன் திருநீலகண்டக் குயவனார்க்கு ஓடு கொடுத்து, மலங்கெடுத்து வீடு கொடுத்தார். குறிப்பிற் குறிப்பறிந்து பணிசெய்யும் திருக் குறிப்புத் தொண்டர்க்கு எந்தை கந்தைகொடுத்து அவர் சகல பந்தத்தை நீக்கினார்.

அம்முறையில் பெருநிதியம் ஈட்டிய அமர் நீதியார்க்குக் கோவணங்காட்டி, பின் அதனை ஒட்டி வீடு காட்டினார் தனக் கென வீடொன்றில்லா இறைவனார். இம்முறையினைத் தொண்டர் சீர் பரவும் அடியாராயினரெல்லாம் "ஆட்பா லவர்க்கருளும் வண் ணம்" என்பர். 'வைத்துநீர் தாரும்' என்று கொடுத்த கோவணத்தைத் தொண்டர் தம் உறைப்பை உலகிற்குக் காட்டுவான் மறையச் செய்தார் கேடொன்றில்லா புண்ணிய மூர்த்தி யாகிய இறைவன். அமர் நீதியார் மாயமாய் மறைந்த கோவணத்தை நாடித் தேடி ஓடினார்; கோவணம் கிடைத்திலது. என்செய்வார், நின்றார்! இதனைக் கூறவந்த சேக்கிழார் 'அங்கண் வேதியர் பெருந்தொடக் கினில்அகப் பட்டார்' என இரட்டுற மொழிந்தார். அமர் நீதியார் இறைவனுடைய பெருவழக்கினில் சிக்கிகொண்டார் என்பது நேர்பொருள். இறைவனுடைய பேருட் டொடர்பில் அகப்பட்டு உய்ந்தார் நாயனார் என்பது மறைபொருள்.

தொண்டர் தம் பெருமையைக் கூறும் சிவனடியார் வர லாற்று நூலில் அமங்கலச் சொற்கள் யாண்டும் வருதல் கூடாது என்பது சேக்கிழாரின் சொல் வைப்பு நெறியில் தலை யாயது. எனவே அமங்கலச் சொற்கள் வைக்க இடங்கள் நேர்ந்துழியும் அச் சொற்களை வெறுத்து நீக்கி மங்கலச் சொற் களிலே அக்கருத்துக்களைப் புலப்படுத்துவது அவரது வழக்க மாகும் அந்நெறிக்கு அடியில் வருவன அமையுஞ் சான்று களாகும்.

முத்திநாதன் சூழ்ச்சியால் மெய்ப்பொருள் நாயனாரைக் கொல்ல எண்ணிவந்தான் என்பதனை 'அற்றத்தில் வெல்வானாகச் செப்பரு நிலைமை எண்ணித் திருக்கோவ லூரிற் சேர்வான்' என்று மறைபொருளிற் சொற்றார். அவன் நினைந்தபடியே நாயனாரைக் குத்திக் கொன்றான் என்ற விடத்து 'தான்முன் நினைந்த அப்பரிசே செய்ய' என்று உரைத்தார். இங்ஙனே அதிசூரனும் மேனியெலாந் திருநீற்றுப் பொலிவு காட்டி மயக்கி, 'இவர் தங்கொள்கைக் குறிவழிநிற்பேன்' என்றுநின்ற ஏனாதி நாத நாயனாரைக் குத்திக் கொன்றான் என்புழி 'முன்நின்ற் பாதகனும் தங்கருத்தே முற்றுவித்தான்' என்று குறிப்பிட்டார்.

திருஞானசம்பந்தரின் அடியார்கள் வாழ்கின்ற திருமடத்தில் சமணர்கள் நெருப்பை வைத்தார்கள் என்ற காலத்து 'மாதவர் திருமடப் புறத்தயல் இருள்போல், வந்து தந்தொழில் புரிந்தனர் வஞ்சனை மனத்தோர்' என்றே புகன்றார். அன்றியும் சிவநேசச் செல்வர்களுக்குத் தீவினையாளர்கள் கொடுந்தொழில் செய்கின்ற காலத்துச் சேக்கிழார் உள்ளம் நடுக்குற்று, பதைபதைத்து அவர்களைப் பழிமொழிகளாலும் இழிமொழிகளாலும் சுட்டுவர் என்பதற்கு அகச்சான்றுகள் இல்லாமலில்லை. 'ஈனமிகு வஞ்சனையால் வெல்வன்' என்று இரவெல்லாம் கண்படை கொள்ளாது திட்டமிட்ட அதிசூரனை 'மண்படுவான் கண்படான்' என்றும், ஏனாதிநாதரைக் கொன்றகாலத்துப் 'பாதகன்' என்றும், அடியார் திருமடத்திற்கு தீயூட்டிய அமணரைப் 'பாவிகள்' என்றும் கூறியதிலிருந்தும் மேலைக் கருத்து நன்கு வலியுறுத்தப்படுவது காண்க.

கருத்துக்களைப் புறத்தார்க்குப் புலப்படுத்த ஆசிரியர் கைக்கொள்ளும் சொல்லமைபபு நெறியே நடை எனப்படும் (Style) என முன்னர் இலக்கணம் வகுத்தோம். ஒவ்வொரு ஆசிரியரும் ஒவ்வொரு முறையில் சொற்கோவை செய்வர். அம்முறை அவ்வாசிரியர்க்கே உரித்தாய் அமையினும் அமையும். வள்ளுவர் எங்ஙனம் தமக்கென ஒருநடையை வகுத்துக்கொண்டார் என்பதையும், கம்பர் எவ்வாறு தனக்கென ஒருதனி சொன்னடைப் பண்பினைப் படைத்துக் கொண்டார் என்பதையும் 'குறள் நடை,' 'கம்பன் காவியநடை' என்ற இரு கட்டுரைகளில் முன் விளக்கினோம். சேக்கிழாரும் தமக்கே உரித்தாயதோர் நடையை எங்ஙனம் தேர்ந்தெடுத்துக்கொண்டார் என்பதை ஈண்டுக் கூறுவாம்.

புலவன் தன்னுள்ளத்தெழுந்த குறித்த உணர்ச்சிகளைக் குறித்த சொற்களால் வெளிப்படுத்துதல் நன்று. அங்ஙனம் புலப்படுத்த இயலாது சொற்பஞ்சம் உடையவனாய்ப் புலவன் துன்புறுவானேல் அவன் சொல்லமைப்பு நெறி தெரியாப் புன்கவிஞனாகக் கொள்ளப்படுவான். இக் கருத்து மேலைநாட்டாரும் உவந்தெழுதிய கருத்து. 'Style is a Quality of language which Communicates precisely emotions or thoughts or a system of emotions or thoughts, peculiar to the author—Style wholly depends upon this precise Communication; where it is not, style does not exist' (The Problem of style - Middletor Murry) சேக்கிழார் போன்ற ஒப்பில் புலவர்கள் இவ்வாற்றலில் நனி சிறந்தவர்கள். சீரிய கருத்துக்களைச் சீரிய சொல்வைப்பு முறையில் வெளிப்படுத்துவர். அச் சொன்னடை இயல்புகள் அவர்கட்கே

உரியவை. செய்யுளின் ஈற்றடியில் ஈற்றுச் சொற்களைச் சொன் மடக்காக வைத்துச் சொல்லணி நனி துலங்கச் செப்புதல் சேக்கிழாரின் தனிநடை முறை. இதற்குப் பின்வருபவை தக்க சான்றுகள் :

"தெய்வநெறிச் சிவம்பெருக்குந் திருவாரூர் திருவாரூர்."
(திருநாவுக்கரசு புராணம்—கஉ)

"வயற்கரும்பின் கமழ்சாறூர் கஞ்சாறூர்."
(மானக்கஞ்சாற நாயனார்—செ. க)

"சூளும் பெருகன் பெனும்மூர்த்தியார் மூர்த்தி யார்தாம்."
(மூர்த்தி நாயனார் புராணம்—செ. கூ)

"உலகில்வளர் அணிக்கெல்லாம் உள்ளுறையு ராம்உறையூர்."
(புகழ்ச்சோழ நாயனார்—க)

"புன்றலைநாய்ப் புனிற்றுமுழைப் புடைத்தெங்கும் உடைத்தெங்கும்."
(திருநாளைப்போவார்—செ. அ)

"செய்வண்ணத் திறமொழிவேன் தீவினையின் திறமொழிவேன்."
(திருக்கண்ணப்பர்—செ. கசக)

"தலைமிசை வைத்து வாழும் தலைமைநந் தலைமை யாகும்."
(அமர்நீதி நாயனார்—சகூ)

"மிக்க திருவிளக்கிட்டார் விழுத்தொண்டு விளக்கிட்டார்."
(கலிய—செ. கக)

"பழமறை பரசுந் தூய பரசுமுன் எடுக்கப் பெற்றார்."
(எறிபத்த நாயனார்—செ. எ)

இச்சொல்லமைப்பு அழகினைத் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் சேக்கிழார் பிள்ளைத் தமிழ் தாலாட்டுப் பருவத்து ஒன்பதாவது செய்யுளில்

"ஈற்றுத் தலையொரு மவுலி புனைந்தா
லென்னச் சொல்லணியொன்
றெய்திப் பொலிய."

என வைத்துப் பாராட்டியதையுங் கற்றறிக.

அடுத்து முரண்தொடை, ஒற்றுமை வேற்றுமை நயம் விளங்கச் சொற்றொடர்களை அமைப்பது சேக்கிழாரது நடையின் தனிப் பண்பு என்பதற்கு அடியில் வருவன சிறந்த எடுத்துக் காட்டுகளாகும் :—

"தளர்வொடு சாய்ந்தும் அன்பு
தம்பிரான் திறத்துச் சாயார்." (திருநீலகண்டர்—கூ)

"இன்ன வாறுவ ளஞ்சுருங்கவும் எம்பி ரான்இளை யான்குடி
மன்னன் மாறன் மனஞ் சுருங்குதல் இன்றி"
(இளையான்குடிமாற நாயனார்—எ)

"உணர்வினால் உணரா ஒன்றை ஒருவரை உணர்த்த வேண்டி."
(இளையான் குடிமாற நாயனார்—௨௫)

"அரிஅறியா மலர்க்கழல்கள் அறியாமை அறியாதார்."
(மானக்கஞ் சாற நாயனார்—௧௦)

"வாளரவு தீண்டவுந்தான் தீண்ட கில்லாள்."
(சம்பந்தர் புராணம்—௪எ௪)

"நெஞ்சு சோரவும் பீலிகை சோர்ந்திலர்."
(ஷை—எஅஅ)

"நீடு பூசனை நிரம்பியும் அன்பினால் நிரம்பன்"
(திருநீலநக்க நாயனார்—௧௦)

"நீங்கினா ரெப்பொருளும் நீங்காத நிலைமையினார்."
(ஏயர்கோன் கலிக்காம நாயனார்—௧அ௦)

"சிறிய பெருந்தகையார்." (சம்பந்தர்—எ௫)

"சிறிய பெருந்தகையார்." (சண்டேசுர நாயனார்—௧௫)

"சிறிய பெருந்தோன்றலார்." (சண்டேசுர நாயனார்—௪௬)

"நீரோ, பெரிய சிறுத் தொண்டர்." (சிறுத்தொண்டர்—௪௪)

"சிறு சோற்றுப், பெருஞ் சிறப்பு." (கழறிற்றறிவார்—௧௫௫)

சேக்கிழாரின் சொல்லாட்சித் திறனைப் பலவகையில் வைத்து உணரலாம். அஃதிலொன்று ஒரு செய்யுளில் ஒரு சொல்லை ஏழு முறை வைத்துப் பல் பொருள் பயக்கும்வண்ணம் பாடும் பேராற்றல். அப் பேராற்றலை வெளிப்படுத்தும் திருத் தொண்டர் புராணச் செய்யுள் பின்வருவதாகும்.

"பேர்பரவை பெண்மையினில் பெரும்பரவை விரும்பல்குல்
ஆர்பரவை அணிதிகழும் மணிமுறுவல் அரும்பரவை
சீர் பரவை ஆயினாள் திருவுருவின் மென்சாயல்
ஏர்பரவை இடைப்பட்ட என்ஆசை எழுபரவை."
(தடுத்தாட்கொண்ட புராணம்—௧௪அ)

இச்செய்யுள் தன் கண்வழி நுழைந்து சென்ற பேரழகியாம் பரவையாரை உள்ளக்கிழி யெழுதி உவந்து நின்ற சுந்தரரின் காதற்பாட்டு. அக்கவியில் 'பரவை' என்ற ஒரு சொல் ஏழிடங் களில் பயிலப்பெற்றுள்ளது. முதலடியில் இரண்டிடம்; இரண் டாமடியில் இரண்டிடம்; மூன்றாமடியில் ஓர் இடம்; நான்கா

மடியில் ஈரிடம். ஆனால் அச் சொல் ஒவ்வோரிடத்தும் பொருள வேறுபாடுடையது. இப்பாட்டிற்கு முன்னாள் கிறித்துவக் கல்லூரித் தமிழாசிரியர் திரு. வா. மகாதேவ முதலியார் அவர்கள் வகுத்திட்ட பொழிப்புரை இஃது:

"பெயர் பரவை என்பது, பெண் தன்மையிற் பெருமை பொருந்திய தேவர்க்குத் தெய்வமாகிய இரதி, விரும்பும் உறுப்பாகிய அல்கு லினது பரப்பு ஆதிசேடன் படம், அழகு விளங்கு கின்ற முத்தைப்போன்ற பற்கள் (முல்லை) அரும்புகள், பரவை என்பது தனக்குக் கூத்தாகவுடையளாகிய (இந்த) இலக்குமியின் திருவுருவின் மெல்லிய சாயலினழகு (ஒரு) கடல்; அதன் கண் விளைந்த எனது ஆசை எழுகடல்" என்பது.

காலஞ்சென்ற திரு கா. சு. அவர்கள் கண்ட உரை பின் வருவது :

"இச்செய்யுளில் 'பெரும்பரவை' என்ற சொற்றொடர் பேர் + உம்பர் + அவை எனப்பிரிவுற்று பெரிய தேவர் கூட்டம் எனப் பொருள்படும். இரண்டாவது அடியின் தொடக்கத்தில் வந்துள்ள 'பரவை' என்னுஞ் சொல் பரவப்படும் தெய்வம் எனப் பொருள் படும். அவ்வடியின் இறுதியில் நிற்கும் 'அரும்பரவை' என்ற சொற்றொடரை அரும்பர் + அவை எனப்பிரித்தல் வேண்டும். மூன்றாவதடியிலுள்ள 'பரவை' என்ற சொல் திருமகள் என்று பொருள்படும் இறுதியடியில் 'பரவை' என்ற சொல் கடல் என்ற பொருளில் வந்தது. இப்பாட்டின் தொகைப் பொருளாவது—பெயரால் பரவை எனப்படுபவள் பெண்டன்மை யினால் விண்ணவர் கூட்டம் போற்றும் தேவமாதரால் புகழப் படுந் தன்மையுடையாள். அழகு விளங்கும் அவளது முத்தின் ஒளிமிக்க பற்கள் முல்லை அரும்புகளை ஒக்கும். திருமகள் போன்ற உடற் சீர் உடைய அவளது திருவடிவின் மென்சாயலாகிய அழகுக்கடலினிடைப்பட்ட என் ஆசையானது எழுகடல் போல்வது என்பதே."

இருவரது உரைகளையும் ஒப்பிட்டுணர்ந்து கவிநயம் காண்மின் சேக்கிழார் 'பரவை' என்ற சொல்லை ஏழிடங்களில் பெய்து சொல்லாடல் காண்பது 'Pun' என்ற மேலைநாட்டுப் புலமை மிக்காரது சொற்றிருவிளையாடலை நினைப்பூட்டுந்தன்மையது.

(தொடரும்)

## மதுரைத் தமிழ்ச்சங்க

# 56-வது ஆண்டு நிறைவு விழா

**28—12—57**-இல் நடைபெற்ற மதுரைச் தமிழ்ச்சங்க ஐம்பத்தாருவது ஆண்டு நிறைவு விழாவில், விழாத் தலைவர், சென்னை உயர் நீதிமன்ற நடுவர், உயர்திரு. **வி. சுப்பிரமணியம்** அவர்கள் ஆற்றிய தலைமை உரைச் சுருக்கம் :

*அநேக நூற்றாண்டுகளாகச் சங்கம் என்ற நிலையம் மறைந்திருந்தபோதிலும் தமிழ்மக்களுக்குத் தமிழ்மீதிருந்த பற்றும், அன்பும் ஒருபோதும் குன்றவில்லை. மூன்றாம் தமிழ்ச்சங்க காலத்துத் தமிழ்மக்கள் அதற்கு முன்னுள் சங்கங்களில் திரிபுரம் எரித்த விரிசடைப்பெருமானும், குன்றம் எறிந்த குமரவேளும், கழகமோடமர்ந்து பசுந்தமிழைப் பண்ணுறத்தெரிந்து ஆய்ந்து வந்தனர் என்று நம்பினுர்கள். அதனுல் ஆதிகாலந்தொட்டே தமிழ் மக்கள் தாங்கள் வணங்கும் தெய்வம் தமிழ்மொழியில் இரண்டறக் கலந்து நிற்றல் வேண்டுமென்ற அவாக் கொண்டிருந்தனர் என்று புலனுகின்றது. மூன்றாம் சங்கம் செயலற்ற பின்னும் தங்களது அன்புக்கும், சேவைக்கும் பாத்திரமான இறைவன் தமிழ் இசையில் உருகவேண்டும், அவனது அருள் வாக்கு தமிழ் வாக்காக இருக்கவேண்டும் என்ற நாட்டம் தமிழ் மக்களிடம் ஒரு சிறிதும் தணியவில்லை. இறைவனும் இணங்கித் தமிழில் நூல் இயற்றினுன்; அறிவுரை செய்தான்; அடி எடுத்துக் கொடுத்தான் ; தடுத்தாட்கொண்டான். இறைவன் கருணைக்குத் தாம் பாத்திரமானதற்குச் சான்றாய்த் திருநாவுக்கரசர் 'தமிழோடு இசைபாட மறந்தறியேன்' என்று முறையிட்டார். அவன் மனம் குளிர்ந்தான். திருமறைக்காட்டில் அப்பர் திறக்கப்பாடினுர். அவரினும் செந்தமிழ் உறைப்பப் பாடி அடைப்பித்தார் சம்பந்தர். பின்னுள்,*

> *"முத்திறமும் வழுத்தவொண்ணுப்*
> *பெருவெளிக்கும் அப்பா லாயுள்ள பொரு*
> *ளீதெனவே பெரிதுஞ் சேயோன்."*

*என ஒருவனையே புகழ்ந்தவரு ளருணகிரிநாதரும் அவனது 'அருணதள பாத பத்மம் அனுதினமுமே துதிக்க அரிய தமிழ் தானளித்தான்' என்றூர்.*

*அது மட்டுமன்று ; தந்தைக்குச் சாமியாய் அருமறைத் தமிழ்நூல் தெரிந்துரைக்கும் புலவோன் என்றும், சிவனைகிகர்*

பொதியவரை முனிவனுக்குக் குருவாய் அவன் அகமகிழ இரு செவி குளிர இனிய தமிழ் பகர்வோனே என்றும் பரிந்து புகழ்ந்தார்.

இவ்வாறெல்லாம் தண்ணார் தமிழ், தென் தமிழ், தீந்தமிழ், பசுந்தமிழ், கன்னித்தமிழ், தெய்வத்தமிழ் என்று பெயரிட்டுத் தமிழ்மக்கள் இன்புறுவதெல்லாம் ஏதோ காக்கைக்குத் தன் குஞ்சு பொன்குஞ்சு என்ற முறையில் ஏற்பட்ட கேவலம் இயற்கை வாஞ்சைதானா, அல்லது உண்மையிலேயே இம் மொழிக்கு அழகுடன் பொருள் தாங்கி உணர்த்தும் வலியும், நலனும் உளதா என ஒரு சிறிது சிந்திக்கலாம்.

கிரேக்கதேசம், உரோமாபுரி, எகிப்து, பாபிலோனியா, பாரசீகம், அரேபியா முதலிய நாடுகள் குன்றின்மேல் விளக்காய் விளங்கிய காலந்தொட்டே தமிழ்நாட்டின் ஒளி நாகரிக உலக மெங்கும் பரவி வந்திருக்கிறது. மூன்றாவது சங்க காலத்திலேயே தமிழரது வாழ்க்கை அநேக ஆயிர வருடங்களாக நாகரிக முறையில் நடத்தப்பட்ட வாழ்க்கையாதலால், தமிழ்ச் சமுதாயம் சில வரையறைகள், சட்டதிட்டங்களுக்குட்பட்டதாய், உயர்ந்த குறிக்கோள்களைத் தன்னகத்தே அமைந்ததாய் விளங்கியது. அந்நாகரிகத்தின் நலன்களையும், கொள்கைகளையும் வகுத்து உலகுக்கு ஈந்தார் வள்ளுவனார். ஒவ்வொரு குறளும் அநேக ஆயிர வருடங்களின் அனுபவங்களை ஒரு சிறு அளவில் திரட்டித் தரும் ஒரு தங்கக்கட்டி. நான் குறள் படிக்கத் தொடங்கிய காலமுதலே என் நினைவினின்றும் என்றும் அகலா நிற்கும் குறள் ஒன்று உண்டு. அஃதாவது:

“ ஆக்க மதர்வினாய்ச் செல்லு மசைவிலா
ஊக்க முடையா னுழை.”

எவனொருவன் செல்வமோ, பதவியோ, புகழோ, மற்ற தொரு நலனோ அடைய விரும்பின், தான் அதை அடைவேன் என்ற நம்பிக்கையில் என்றும் தளர்வற்றவனாய் அதற்குரிய முயற்சியில் இடையறாது ஈடுபட்டு வருவானாயின், அந்நலன் அவனிருக்கு மிடத்திற்கு வழி கேட்டு அவனை வந்தடையும் என்பது அதன் கருத்து. இந்தக் குறளை நான் முதலில் படித்த தற்கு அநேக ஆண்டுகளுக்குப் பின் ஓர் அமெரிக்கப் பெரியார் எழுதிய “Think and grow rich” என்ற புத்தகத்தைப் படித் தேன். அது பல நூறு பக்கங்கள் கொண்ட புத்தகம் மிகவும் அருமையான உண்மைகள், அநுபவங்கள், மனித சரித்திரங்கள் எல்லாம் அடங்கிய நூல். ஆனால், அந்த நூல் முழுவதும், முதல் பக்கம் முதல் கடைசிப் பக்கம்வரை அந்த ஒரு சிறு குறளுக்கு

விரிவுரையே. நம் மொழியின் பெருமையை என்னென்று சொல்வது! அநேக நூறு பக்கங்களில் ஆங்கிலத்தில் விளக்க வேண்டியிருக்கும் ஓர் உண்மையை ஆறு சொற்களில் அழகாக விளங்கவைக்கும் வனப்பும் வன்மையும் பெற்ற மொழி நம் மொழி! அவ்வாறே குறள் ஒவ்வொன்றும்; அவ்வாறே சங்க நூல் ஒவ்வொன்றும்.

சில நூற்றாண்டுக்குப்பின் தேவாரம், திருவாசகம், பிரபந்தங்கள் முதலிய பக்தி நூல்களில் தமிழ் இறைவனுக்கும், சமயத்திற்கும், மக்களுக்கும், செய்த சேவை அம்மொழியின் இதர பல நயங்களையும், திறன்களையும் மிளிரச்செய்தது. திருவுந்தியார் முதல் சிவஞான மாபாடியம் வரையுள்ள சைவ சித்தாந்த நூல்களால் யோகஞானம் வாய்ந்த அருந்திறத்தவர், கூர்மையாய் ஆய்ந்து அறியும், நூலளவிலே நிற்கும் உண்மைகளையும் தெளிவு படக்கூறும் திறன் தனக்கு உளது என்று நம் மொழி நிரூபித்தது. பல மொழிகளைக் கற்றறிந்த ஐரோப்பியப் பேரறிஞர் பலர் தமிழைப் படித்துப், பாடிப், பேரானந்தம் உற்றனர் என்பது நமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. ஆனால் வியப்பல்ல.

ஒரு சமுதாயத்தின் நிலை அதன் உள்ளத்தைப் பொறுத்தது. வாழ்க்கையின் குறிக்கோள்களை எந்த முறையில் ஒரு சமுதாயம் வகுத்திருக்கின்றதோ, அந்த அளவே அந்தச் சமுதாயம் உயர் நிலை எய்தல் கூடும்.

> "வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
> உள்ளத் தனைய துயர்வு."

என்ற குறளில் உள்ளம் என்ற சொல்லுக்கு எண்ணம், கொள்கை என்று பொருள் கொள்வோமாயின், தனி மனிதனைக் குறித்து மட்டுமல்ல, ஒரு சமுதாயத்தையும், ஏன், உலகையுமே குறித்துக் கூறப்பட்ட மறைமொழியாகும் இது.

இந்நாளில் உலகில் மிகுந்த தோள்வலி படைத்த நாடுகளாக விளங்குபவை உருசியாவும் (The Soviet Union) அமெரிக்காவுமே (The United States of America).

கசுoரு-ஆம் ஆண்டில் நடந்த உருசிய-ஜப்பானிய யுத்தத்தில் உருசிய தேசமானது, நின்று போர்செய்யும் வீரமின்றி, ஐப்பானியரின் சிறப்போங்கும் முறையில், சமாதான ஒப்பந்தம் செய்துகொண்டது கசுகஎ-ஆம் ஆண்டில் உலகப் பெரும்போரில் ருசிய வீரர்கள் எதிரிகளிடம் போர்செய்வதை விடுத்துத் தங்கள் சேனாபதிகளையும், தளகர்த்தர்களையுமே தாக்கும் நிலைக்கு வந்துவிட்டார்கள். ஒரு நாட்டிற்காக அந்நாட்டு மகன் எவனும் தன்

உயிரைத் தியாகம் செய்யத் தயாராக இருப்பதே அந்நாட்டின் நன்னிலைக்குச் சான்றாகும். தமிழ்நாடு உன்னத நிலையில் இருந்த நாளில், அதன் பெருமைக்குக் கேடிழைக்கும் முறையில் போர் மூண்டால், தமிழ்மக்கள் ஊக்கத்துடன் போர்க்களம் சென்றது மட்டுமன்றித், தமிழ்நாட்டுத் தாய்மாரும் தங்கள் செல்வரை மகிழ்ச்சியுடன் போருக்கு அனுப்பிவைத்தார்கள்.

மூதில் மகளிர் என்று போற்றப்பட்ட அத்தகைய வீரப் பெண்டிர் பலரின் செயலைப் புறநானூற்றில் நாம் காண்கிறோம். ஒரு பெண்ணின் தமையன் போர்க்களத்தில் யானையை வீழ்த்தித் தானும் இறந்தான். அவள் கணவன் பகைவர் தன் நாட்டினுள் இறங்காவண்ணம் அவர்களை எதிர்த்து உயிர் நீத்தான். பின்னும் போர் மூள, தனது ஒரே மகனை ஒருதாய் ஊக்கமூட்டிப் போருக்கு அனுப்புகிறாள்.

கெடுக சிந்தை! கடிது இவள் துணிபே! என்னும் புறநானூற்றுச் செய்யுளா னுணரலாம்.

தமிழ் நாடு, தமிழ் மரபு, தமிழ் நாகரிகம் இவைகளின் அடிப்படைக் கொள்கைகள் என்னவென்று ஆராய்வது இப்பொழுது நம் கடனாகின்றது. தமிழ்நாடு என்ற மாத்திரத்திலேயே மாபெருங் கோபுரங்கள் நம் மனக்கண் முன்னே தோன்றுகின்றன. நம் நாட்டு நாகரிகம், நாற்பெரு நற்றூண்களால் தாங்கப்பட்டதொரு அழகிய கோபுரமாக எனக்குக் காட்சியளிக்கிறது. அதன் முதல் தூண் அறம் என்பது. அது எண்ணுதற்கும் அரியதொரு ஞானசக்தி. அதன்வழி நின்றோர்க்கு அது சிறப்பீனும் செல்வமுமீனும். தர்மம் தலைகாக்கும் என்னும் முதுமொழி குறிப்பதுவும் அதுவே. ஆனால் அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றம் ஆம். ஆதலின், "ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே; செல்லும் வாய் எல்லாம் செயல்" வேண்டும். அதினின்றும் அறம் செய்யும் வகை யாது, என்ற கேள்வி பிறக்கின்றது. அதற்குப் பதிலே தமிழ்ப் பண்பின் இரண்டாவது நற்றூணாகிய அன்பு என்பது.

"தருமமே போற்றிடின் அன்பு சார்ந்திடும்;
அருளெனும் குழவியும் அணையும்."

அன்பே சிவம்; அயரா அன்பினாலேயே அரன் கழல் சேர்தல்கூடும். எவ்வாறு அன்போடியைந்த வாழ்வையும் சமுதாயத்தையும் அறம் வளர்க்கின்றதோ, அவ்வாறே அன்பற்ற சமுதாயத்தை அறம் வெறுக்கின்றது.

"என்பில் அதனை வெயில்போலக் காயுமே
அன்பில் அதனை அறம்."

தமிழ் வாழ்க்கையின் மூன்றாவது நற்றாணுவது பொருள். பொருளீட்டும் முயற்சி இறைவனை விட்டு மனிதனைப் பிரிக்கும் தன்மையது என்பது தமிழர் கொள்கையல்ல. தீதற்ற வழியில் பொருள் சேர்க்கும் முயற்சி இறைவனுடன் ஆன்மாவைப் பிணைக்கும் ஒரு கருவி என்பதே தமிழ்ப்பண்பு. ஆணவ மலத்தால் சூழப்பெற்று மயக்கமுற்றிருக்கும் ஆன்மாவானது அறிவும் நல்லுணர்வும் பெறுமாறு தனுகரண புவன போகங்களை இறைவன் அதற்கருளுகிறான் என்பதே தமிழ்மறை. அன்புகலந்த வழியில் பொருள் தேடி அதை வழங்கி அனுபவித்தல் இன்பம் பெறும் வழி. ஆதிகாலத் தமிழ்மக்கள் திரவியம் தேடுவதற்காகத் திரை கடல் ஓடினார்கள். ஆங்காங்கே தங்கள் குடிகளையும் ஏற்படுத்தினார்கள். அகத்துறை இலக்கியத்தின் பெரும்பகுதி தமிழ் மகன் பொருள் தேட இதர நாடுகளுக்குச் செல்லும் வழக்கத்தின் அடியாகப் பிறந்தது. தலைவனும் தலைவியும் பிரிய நேர்வதால் ஏற்படும் உள்ளக் கிளர்ச்சிகளை அவ்விலக்கியம் சித்திரிக்கின்றது.

"அறனீனும் இன்பமும் ஈனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்."

என்றார் வள்ளுவனார். அறமும் பொருளும் பிரிக்கமுடியாத அளவில் இணைக்கப்பட்டிருக்கின்றன தமிழ்ப் பண்பில்.

செல்வமும், இன்பமும் மக்களனைவரிடமும் பரவி நிற்க வேண்டும் என்பது தமிழ் மரபின் நான்காம் நற்றாண் ஆகும்.

"நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்."

என்றார் திருமூலர்.

"காக முறவு கலந்துண்ணக் கண்டீர்; அகண்டா காரசிவ
யோக மெனும்பே ரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏக வுருவாய்க் கிடக்குதையோ! இன்புற் றிடநாம் இனியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேர வாரும் செகத்தீரே!"

என்று அழைத்தார் தாயுமானவர்.

"எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல், வேறொன் றறியேன்; பராபரமே."

என்று வாழ்க்கையின் நோக்கத்தை வரையறுத்தார்.

செல்வம் படைத்தல் வழங்குதல் பொருட்டு என்பது தமிழ்ப் பண்பு. தொன்றுதொட்டு வருகின்ற குடியின்கண் பிறந்தார்க்கு நல்குரவு, வழங்குவது உள்வீழ்தல் என்றார் பரிமேலழகர்.

" தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு."

என்றார் வள்ளுவனார்.

பொருட் செல்வம், சமயச் செல்வம், கல்விச் செல்வம், கலைச் செல்வம் அனைத்தும் மக்கள் அனைவரிடமும் பரந்து சென்று நின்று, அவர்கள் வாழ்க்கையைத் தூய்மைப்படுத்தி இன்புறச் செய்யும் முயற்சியில் ஈடுபடுவது தமிழ்ப் பண்பின் நான்காவது நற்றாண்.

அறம், அன்பு, பொருள், பரப்பு ஆகிய இத்தூண்கள் மாத்திரம் கொண்டதாயிருந்தால் தமிழ் வாழ்க்கை ஏனைய சமுதாய வாழ்க்கையினும் தனிச் சிறப்புடையதாகாது. அத் தனிச்சிறப்பு இத்தூண்கள் தமக்கேற்ற அழகிய கோபுரத்தைத் தாங்குவதால் தமிழ் வாழ்க்கைக்கு ஏற்படுகிறது. அந்தக் கோபுரம் பதிஞானம், இறைகழல் சேரல், உய்தல் என்பது தனு, கரண, புவன போகங்களால் ஆன்மா அடையும் திருப்தி. அம்மட்டில் நின்றுவிடுவதற்காக அல்ல; தன்னையும், தன் பதியையும் அறிவதற்காகவே என்பது தான் தமிழ் மாண்பைச் சிறக்கச் செய்யும் இலக்கணம்.

அறம், அன்பு, பொருள், பரப்பு, பதிஞானம் இவைகள் தமிழ்ப் பண்பின் ஐந்தெழுத்தாம்.

இப் பழைய கொள்கைகள் இந்நாளில் நமக்குப் பயன்படுமா என்று சிலர் கேட்கலாம். நம் கொள்கைகளை மாற்றினால் நம் பண்பினின்று நாம் தவறியவர்களாவோம். கொள்கைகள் நமககுச் சேவை செய்யும் முறைகளை மாற்றி அமைத்துக் கொளவதன் மூலம் நாம் நம் வளர்ச்சிக்கு ஏதுதேடிக்கொள்கின்றோம்.

முன்னாள் சமுதாயத்தின் அச்சாணியாயிருந்தவன் அரசன். அவனைச் சுற்றியதே உலகம். மன்னவன் கோல் நோக்கி வாழும் குடி என்றார் வள்ளுவர்.

" நெல்லும் உயிரன்று ; நீரும் உயிரன்று ;
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்."

என்பது புறநானூறு. இன்று நாமெல்லோரும் நம் நாட்டு மன்னர்கள். குடி என்ற சொல்லை மாற்றியமைக்க வேண்டியவர்களாகின்றோம். நாமார்க்கும் குடியல்லோம். மக்களது உரிமைகளையும் கடமைகளையும் முன்னாள் நூல்கள் வகுத்தவாறு இப்பொழுது வகுப்பது பொருந்தாது. பொருளை மக்களுக்கு வழங்கும் முறையிலும் இந்நாள் மக்கள் மாறுதல் எதிர்பார்க்கிறார்கள்.

மக்கள் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ளும் முறையிலும் மாறுதல்கள் ஏற்படுகின்றன. இவைகளெல்லாம் நாம் தடுக்க முடியாத பெரு நிகழ்ச்சிகளால் ஏற்படுபவை. அவைகள் நம் நாட்டினுள் வாரா என்று எண்ணுவது தீக்கோழியின் புத்தி. அச்சக்திகளுக்கு நம் பண்புகளையும், நம் நாட்டில் தொன்று தொட்டு நின்று வரும் வாலறிவன் நற்றாள் தொழும் சிந்தையையும் அசைக்கமுடியாத முறையில் வழி வகுக்கவேண்டியது நம் கடனாகிறது. இல்லையேல நம் பண்புகளுக்கு முற்றிலும் மாறான கொள்கைகளும், செயல்களும் நம் கண் முன்னேயே நம் மக்களைப் பற்றிக் கொள்ளக்கூடும். தமிழ்ப் பண்பின் ஐந்தெழுத்திற்கேற்ப உலகத்தின் புதுச்சக்திகளைத் திருத்தி அமைத்துப் பிரயோகிக்கும் வலிமை நமக்கு ஏற்படுமாறு நம் மக்கள் மனத்தைப் பண்படுத்தும் நூல்கள் தேவை. அவைகளை Citizenship நூல்கள் என்று சொல்லலாம். அந்த முறையில் சொற்பொழிவுகளும் நம் சங்கத்தின் ஆதரவில் நடத்தப்படலாம்.

வாழ்க தமிழ்! வாழ்க சங்கம்!

---

## தண்டமிழின் பாற்பொங்கல்

[திருவையாறு, திரு. இரா. இராமாநுசனார்.]

தமிழ்கூறு நல்லுலகின் தைத்திங்கள் வந்தால்
அமிழ்தூறு நந்நாவில் ஆனந்தம், ஆனந்தம்!
பேதைமைப் பேயோடப் பேரிருள் தானகலும்!
ஏதமிலா அறிவொளியாம் இன்பருதி தானெழுவான்!
கன்னலாம் நற்கவிதை கையதனில் ஏந்தியநாம்,
செந்நெலின் பாற்பொங்கல் செந்தமிழில் மூவகையாய்,
பண்டையநம் பைந்தமிழின் பண்புகள் பலபாடித்
தண்டமிழின் தைதனிலே தானுண்போம் பாற்பொங்கல்!
முத்தமிழும் முப்பொங்கல்! மூன்றுவிதத் தீஞ்சுவைதாம்!
இத்தலத்தில் ஈடாமோ எங்கள்தைப் பொங்கலுக்கு!
பொங்கலின் புத்தாவி[1] பொன்னாட்டின் பண்(பு)ஆவி[2]
எங்குமது எந்நாட்டும் இந்நாளே பரவட்டும்!

---

1. ஆவி - ஆவிப்புகை. 2. ஆவி - உயிர்.

# வள்ளல் திரு. ச. வெள்ளைச்சாமி நாடார் மணிவிழா

விருதுநகர் வள்ளலும், தமிழ்மறைக் காவலருமான உயர்திரு. ச. வெள்ளைச்சாமி நாடார் அவர்களின் மணிவிழா 29—12—57-இல் முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுகாலை அன்னாருக்கு 'அறக்கொடை அண்ணல்' என்னும் சிறப்புப் பட்டமும், வெண்பொற் கேடயமும் வழங்கப்பட்டன. அத்துடன் பொன்னாடை போர்த்தியும் சிறப்புச் செய்தனர்.

வள்ளல் வெள்ளைச்சாமி நாடாரவர்கள் விருதுநகரில் சங்கர குமார நாடார் என்னும் திருவாளருக்கும் சிவகாமியம்மையார் என்னும் அவர்தம் மனைவியாருக்கும் 21—7—1897-இல் திருமகனாய்ப் பிறந்தவர். இவர் பள்ளியில் பயிலும்போதே திருக்குறளில் மிக்க ஆர்வமுடையவராய்த் திகழ்ந்து, பின்னர் மணவாழ்க்கையில் வள்ளுவர் வகுத்த அறவழியிலே நின்று 'ஈதல் இசைபட வாழ்தல்' என்னும் பொய்யாமொழிக்கு எடுத்துக் காட்டாக விளங்கினார் அண்ணாமலையம்மையார் என்பவர் இவர்தம் கருத்தொருமித்த இல்லக் கிழத்தியாய் அமைந்துள் ளனர். இங்ஙனம் சிறப்புற வாழும் இவர்கட்கு இரு பெண் மக்களும் நான்கு ஆண்மக்களும் உள்ளனர்.

திரு. நாடாரவர்கள் செய்துள்ள ஏற்பாட்டின்படி கடந்த பதினாறு ஆண்டுகளாக விருதுநகரில் திருக்குறள் வகுப்பு நடை பெற்று வருகிறது. இவர் தம் சொந்தச் செலவில் பல திருக்குறட் கழகங்களைத் தோற்றுவித்தும், நன்கொடை வழங்கியும், விழாக்களை நடைபெறச் செய்தும் வருகிறார். இவரிடமிருந்து நன்கொடை பெறாத கழகங்களோ விழாக்களோ விருதுநகரில் இல்லை எனலாம்.

அன்றியும் விருதுநகர் நகராட்சிப் பூங்கா, நகராட்சி நூல் நிலையம், வெள்ளைச்சாமி நாடார்—அண்ணாமலையம்மாள் உயர்தர ஆரம்ப பாடசாலை, மகளிர் மருத்துவ இல்லமும் மகப்பேறில்ல மும், அண்ணாமலை பெண்கள் பாடசாலை முதலியன இவர்தம் அறக்கொடையால் நின்று நிலவி வருவனவாகும்.

வள்ளல் நாடாரவர்கள் மேலும் பல்லாண்டு நல்வாழ்வு வாழ்ந்து குறளுக்கும் தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் சீரிய தொண்டுகள் ஆற்ற எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக.

---

# பொருளிலக்கணம் ஒரு சமூக அறிவியல்

[வித்துவான், சு. குமாரஸ்வாமி ஆச்சாரி, M. A., மயிலம்]

*பண்புடைமை:*

*உலகில் மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் பல பொருள்களைப் பற்றியும் அறிதல் வேண்டும் என்னும் ஆர்வம் உடையவர். ஆதலால், காரணகாரியத் தொடர்பும்—(நன்று தீது எனப் பகுத்துணரும் அறிவும்) கடவுட் கொள்கையும் உலகில் பரவுதற்கு மேற்கொள்ள வேண்டிய நல்லொழுக்கமும், ஒருங்கு கூடிவாழும் வாழ்வும் (character and conduct) ஒவ்வொருவரும் உடையவராதல் வேண்டும். இத்தகைய இயல்பே பண்பு எனப் படும்.*

*பொருள்களின் இயல்பை உள்ளவாறு உணரும் ஆர்வம் மனதிற்கோர் மகிழ்ச்சி யளிக்கிறது; மனதை ஒருமுகப் படுத்துகிறது; விருப்பு வெறுப்பற்ற நிலையில் ஆய்ந்துணரத் தூண்டுகிறது; அதனால் மெய்யறிவு வளர்ச்சி யடைகிறது. இம் மெய்யறிவு நம் இயல்புகளை நன்னெறியில் உயர்த்துகிறது. அறிவை வளம்படுத்துகிறது. பகுத்தறிவு நல்லனவற்றைச் செயலில் மேற்கொள்ளத் தூண்டுகிறது. மக்கள் யாவரும் ஒருங்கு அமைதியாக வாழ வழிகோலுகிறது. எனவே பண்புடைமை அமைதி நிறைந்த நல்வாழ்வை நல்குகிறது. எனவே பண்புடையாளர் அன்புடையார், நயனொடு நன்றி புரிந்த பயனுடையார், ஆன்றகுடிப் பிறந்தார். "நல்லகுடிப் பிறந்தார் நல் கூர்ந்தாராலும் இல்லையென மாட்டார்" அன்றோ? ஆதலின் மக்கள் தம் ஐயந்திரிபுகளை நீக்கி அவர்கள் செய்யும் பிழைகளைப் போக்கி, அவர்களைத் துன்பத்திலிருந்து விடுவிப்பதே தம் கடமையாகக் கொண்டொழுகுவர்.*

*சமைய வாழ்வு*

*இத்தகைய அமைதியும் இன்பமும் நிறைந்த வாழ்வினை நல்குவது—காரண காரியத் தொடர்புணர்வே ஒன்றைச் செய்ய வேண்டும், பெறவேண்டும் என எழுகின்ற வேட்கையே—ஆகும். ஒன்றினைக் கருதிய பொழுதே செய்துமுடிக்க வேண்டும் என இவ்வேட்கை தூண்டும். ஆராய்ந்துணராமலோ, அரைகுறையாகவோ ஆற்றுஞ்செயல் நன்மை விளைக்காது; தீமையே தரும். ஆதலின், எதனையும் எண்ணித் துணிதல் வேண்டும். அறிவினுளெல்லாந் தலையென்ப தீய, செறுவார்க்குஞ் செய்யா*

விடல், "அறம்பாவம் ஆயும் அறிவுதனைக் கண்டால், பிறந்துழல வேண்டா பெயர்ந்து" ஆதலின், "கடனென்ப நல்லவையெல்லாம்" எனக் கருதிச் செயலாற்றுவதே கடவுளின் அருளுள்ளத்தை யுணர்ந்து செயலாற்றுவதாம்—கடவுட்கொள்கையை உலகில் பரப்புதலாம். இம்மெய்யறிவே—உலகிலுள்ள உயிர்களின் இயல்பினை யறிந்து, அவைகளுக்குத் தம்மாலும் பிறராலும் தீங்கு வாராது வாழ்தல் வேண்டும் என்னும் அறிவே—இறைவனருளை யுணர்ந்த அறிவாம். இம்மெய்யறிவே—சிவஞானமே—மக்களது உடனுறை வாழ்விற்கு [ஒப்புரவு—(Social life) சொள்ளுதற்கு] முதற்படியாம். இதனாலன்றோ "பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்" என்றார் கபிலர்.

> "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
> நன்றே புரிமின் நமனில்லை."

என்பது திருமந்திரம். ஆதலின் இப்பண்புடைமையே சமயம் சாற்றும் சன்மார்க்க நெறியாம—நன்னெறியாம்.

**என்கடன் பணிசெய்து கிடப்பதே**

ஒவ்வொருவரும் அறனிழுக்கா வாழ்க்கையை மேற்கொண்டு பிறரையும் நல்லாற்றின் ஒழுகச் செய்தல் வேண்டுமன்றோ? ஆதலின், இப்பண்புடைமை தன்னைப் பற்றியது பிறரைப் பற்றியது என இருவகைப்படும். "உடம்பினுள் உத்தமனைக் காண்" எனக் கூறுகின்றார் ஔவையார். உடம்பாரழியின் உயிராரழிவர். ஆதலின், உயிர் இவ்வுடலிலுள்ளபோதே "நன்றே புரமின்" நமனில்லை" எனச் சாற்றுகின்றது சமையம். இதனை நோக்கின் 'உயிர் (மக்கள்) நலமடைய, உடம்பின் துணைகொண்டு உள்ளத் தூய்மையொடு நன்மை புரிதல் வேண்டும். உயிர் உடல் மனம் இரக்கம் (இதயம்) ஆகிய இவை தூயவாதல் வேண்டும்,' என்பது நன்கு புலனும். எனவே ஒவ்வொருவரும் தன்னைத்தானே தூய்மைப் படுத்திக்கொள்ளும் பண்புடையராதல் வேண்டும். பிறரையும் தூயவாழ்வு பெறச் செய்யும் பண்புடையராதல் வேண்டும். திருவள்ளுவர் தன்னைத்தானே தூய்மைப்படுத்திக் கொள்ளும் நெறியை அறத்துப் பாலிலும், பண்புடைமையைப் பொருட்பாலிலும் அமைத்திருக்குந் திறன் உன்னி யுணர்தற்குரியது. சான்றாண்மையை யடுத்துப் பண்புடைமையை அமைத்திருப்பதும் இக் கருத்தினை வலியுறுத்தும். "தூஉய்மை என்ப தவாவின்மை" என அறத்துப் பாலிலும், "நண்பாற்றாராகி நயமில செய்வார்க்கும், பண்பாற்றா ராதல் கடை" எனப் பொருட்பாலிலும் புகல்வது காண்க. எனவே தன்னைத்தானறிந்த அறிவுகொண்டு, தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெற்றியோனாதலே பண்புடைமையாம் என்பது வெள்ளிடை மலையாம்.

"தன்னை யறிந்து செறிந்தடங்கித் தானற்றால்
பின்னைப் பிறப்பில்லை வீடு"

"ஈச னெனக் கருதி யெல்லா வுயிர்களையும்
நேசத்தால் நீங்கினைந்து கொள்."

என்பது ஒளவையார் அமுதவாக்கன்றே 'இறையுணர்ச்சியோடு' என்கடன் பணிசெய்து கிடத்தலே என்னும் எண்ணம் இல்லாது, கிடைக்கும் பிற பொருள்களைக் கொண்டு வாழ்வில் இன்பங் காணல் இயலாது.' என்பது உலக வாழ்வை உன்னி யுணர்வார்க்கு நன்கு புலனும்.

"பன்னும் பனுவல் பயன்றேர் அறிவிலார்
மன்னும் அறங்கள் வலியிலவே—நன்னுதால்
காழொன் றுயர்திண் கதவு வலியுடைத்தோ
தாழொன் றிலதாயிற் றான்."

எனச் சிவப்பிரகாசச் செந்நெறியாம் நன்னெறி நவில்வது காண்க. "ஈசனுக்கு அன்பில்லார் எவ்வுயிர்க்கும் அன்பில்லார்" எனச் சிவஞான சித்தியார் செப்புதலும் இதனை வலியுறுத்துதல் காண்க.

பிறர்க்கெனவாழும் பெற்றிமையுறு நெறி

"சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு."

"அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்."

"மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு."

"தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை யடல்வேண்டா தான்."

"இன்னசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு."

"நண்பாற்ற ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்ற ராதல் கடை."

எனத் திருவள்ளுவர் கூறும் அருமருந்தன்ன மொழிகள் தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெற்றியை யுணர்த்துதல் காண்க. பிறரால் தனக்குவருந் துன்பங்களைப் பொறுத்தலும் தனக்குத் தீங்கிழைத்தார்க்கும் தீங்குசெய்யாமையும் வேண்டும். எனவே பொறுமையும் இன்னா செய்யாமையுமே

இன்றியமையாது வேண்டப்படுவனவாம். இவ்விருவகைப் பண்பும் ஒருங்கமைவதே தவமாம்.

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு."

என்பது வள்ளுவர் வாய்மொழி.

"எவ்வகைப் பொருள்களு மீய வல்லது
செவ்விய தவமதே தெரியின் வேறிலை
இவ்வுல கினிலஃ தியற்று கின்றதே
உவ்வுட லெடுத்தபே றுறுதி யென்பவே."
(திருக்கூவப் புராணம் : நைமி. உ௬)

இந்தத் தவநெறியை யடைய அறமே துணைபுரியும். அறம்,

"புகழும் கல்வியும் செல்வமும் வீரமும் பொலிவும்
மகிழும் கோலமும் ஒழுக்கமும் விழுப்பமும் வழங்கி
இகழும் பாவமும் பழியும்நீத் தரனுமை யிடத்தில்
திகழும் பூதனு யவரருள் செய்யவும் செய்யும்."
(திருக்கூவ : நைமி. ௩௧)

"அரிய வாகிய கலைகள் யாவையும் பயிலறிஞர்
பெரிய மாதவர், உயர்தரு குலத்திடைப் பிறந்தோர்
உரிய தானியைப் புகழ்ந்தனர் உறுவரவ் வளவோ
தரிய லார்களு முறவுசெய் தவன்புடை சார்வார்."
(திருக்கூவ : நைமி. ௩௬)

ஆதலின் அறநெறி பலவற்றுள்ளும் கொடையே (தானமே) சிறந்ததாம்.

"உவமந் தீர்ந்திடு வாய்மையொன் றேயுறி னுலகில்
தவமுந் தானமும் ஒருங்குறச் செய்தலின் றலையாய்ப்
பவம கன்றுநான் மறைமுடி வாகிய பரம
சிவன ரும்பதம் பெறும்படி யுயர்த்திடும் தெரியின்."
(திருக்கூவ : நைமி. ௩௮)

தவம் தானம் இரண்டையும் ஒருங்குறச் செய்தலின்,

"யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற."

"இல்லொ ழுக்க மியைந்து பிதிர்க்கடன்
ஒல்லும் வண்ண முளுற்றி மரபுளோர்
செல்லும் வெந்நிர யத்துயர் சிந்துவான்
வல்ல மக்கட் பெறற்கிணை மற்றிலை." (திருக்கூவ : நைமி. ௩௬)

ஆதலின், அறிவறிந்த மக்கட்பேற்றொடு கூடிய இல்லற நெறியே சாலச் சிறந்ததாம். எப்பொழுதும் வாய்மை தவறாது வாழ வேண்டுமாதலின் மனத்தூய்மை வேண்டும்.

"உறவு தந்தைதாய் ஒண்டொடி மாதரார்
சிறுவர் வண்புவி செல்வம் பெரும்புகழ்
பிறவி னும்படும் ஆசை பிரிந்தமெய்த்
துறவி னல்லது துன்பம் அகலுமோ." (திருக்கூவ: நைமி. சஎ)

"ஆதலின் பெண்மயக் காதி நீங்கியே
தீதறத் துறந்திடும் அரிய செய்கையே
மேதகக் கதியினில் விடும்." (திருக்கூவ: நைமி. ௫0)

"தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்." (திருக்குறள், ௩௬௪)

"பிறப்பினாற் பெற்ற பயனுவ தெல்லாம்
துறப்பதாந் தூநெறிக்கண் சென்று." (ஔவை குறள்)

ஆதலின், இல்லறநெறி நின்று அவாவின்றி வாய்மை கடைப்பிடித்து வரையாவண்மையுடையராய் அறநெறி நின்று நன்மை கடைப்பிடித்து பிறர் செய்யும் துன்பம் பொறுத்து வாழும் வாழ்வே இன்னா செய்தார்க்கும் இனியவே செய்து வாழும் பெற்றியைத் தரும் என்பது நன்கு புலனாதல் காண்க.

"உண்டால் அம்மஇவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே."

## நன்னெறியுறும் நெறி

இந்நெறியில் நிற்கவேண்டுமாயின் திருத்தலங்களைக் கசிந்துறல் வேண்டும். ஏன்?

"அறந்தலை நிற்ற லாற்பே ரறிவினாற் கொடையா லன்பான்
மறந்தரு கொலைக ளாதி மாற்றலால் வாய்மைச் சொல்லால்
நிறைந்தவிக் கலியு கத்து நிலைத்தசீர்க் கூவ மூதூர்ச்
சிறந்தவே ளாள ரானோர் தேவரென் றறிய லாமால்."
(திருக்கூவ: திருத்தல. ௯௬)

"நடைவலம் வரவி ருத்தல் நற்சுகா தனம்வ ணக்கம்
இடைமொழி துதித்தல் கேட்டல் கேள்வியுன் னுதல்தி யானம்
அடைதுயில் சமாதி செய்கை யரன்றெழில் நோக்கல் கொன்றைச்
சடையனை நாட லாகும் தனைநிகர் கூவத் தன்றே."
(திருக்கூவ: திருத்தல. ௬௦)

எனும் சிவப்பிரகாசர்தம் அருண்மொழிகளை நோக்குக. நன்னெறியி லொழுகும் பெரியோர்கள் வாழும் திருத்தலங்களில் செல்வோரும் அந்நெறி நிற்கப் பழகுவர். ஆதலின், ஒவ்வொருவரும் இறைவன் திருவருளை எளிதிலடையலாம்.

"மைந்தரை யன்னையை மாதரை யாவைத்
தந்தையை யந்தணர் தம்மை வதைத்த
அந்தமில் பாதக ராயினும் எல்லை
வந்திடின் அந்நகர் வண்கதி நல்கும்."
(திருக்கூவ: திருத்தல. ௬உ)

என்பதும் பொய்யாமோ?

அரசர்க்குரிய ஆறுறுப்புக்களில் குடி ஒன்றெனக் கூறி, குடிமையின் இன்றியமையாமையை விளக்கி, அதனைக் காக்கும் முறையையும் வகுத்துரைத்த வள்ளுவர்தம் கருத்து இதனை வலியுறுத்துமாற்றை ஓர்ந்துணர்க. தல புராணங்கள் பல எழுந்ததன் நோக்கம் தூய வாழ்வினை யடையும் நெறிகளை வலியுறுத்தலேயாம், என்பதையும் ஆய்ந்துணர்க. புராணங்களுள் நாட்டுப்படலம் நகரப்படலம் அமைப்பதன் நோக்கத்தையும், தலபுராணங்கள் எழுந்ததன் காரணத்தையும் தெள்ளிதின் விளக்கும் திருக்கூவப் புராணத்தை யருளிய கவிசார்வபௌமராம் சிவப்பிரகாச அடிகளாரது சீரிய வான்றனிச் செய்யுட்களின் பெருமை அளவிடற்பாற்றே!

மெய்கண்டார் கூற்று

"செம்மலர் நோன்றாள் சேரலொட்டா
அம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே."

என்பது சிவஞானபோதம். இச் சிவஞானபோதப் பன்னிரண்டாம் சூத்திரக் கருத்தை,

"செங்கமலத் தாளிணைகள் சேர லொட்டாத்
திரிமலங்க ளறுத்தீசன் நேசரொடும் செறிந்திட்டு
அங்கவர்தம் திருவேடம் ஆலயங்க ளெல்லாம்
அரனெனவே தொழுதிறைஞ்சி ஆடிப் பாடி

எங்கும்யாம் ஒருவர்க்கும் எளியோம் அல்லோம்
யாவர்க்கும் மேலானோம் என்றிறுமாப் பெய்தித்
திங்கள்முடி யாரடியார் அடியோ மென்று
திரிந்திடுவர் சிவஞானச் செய்தியுடை யோரே.''

எனச் சிவஞான சித்தியார் விளக்குதலைக் காண்க. "மலங்கழீஇ, அன்பரொடு மரீஇ, நேயம் மலிந்தவர் வேடமும், ஆலயமும் அரன் எனத் தொழுக'' என்றது சிவஞானபோதம். 'இங்ஙனம் தொழுது இறைஞ்சுவதால் அடியார்கள் யாவர்க்கும் மேலாக விளங்குவர்' எனச் செப்புகிறது சிவஞான சித்தியார். ஆழ்ந்து சிந்திக்கின் தலபுராணங்களின் நோக்கம் இஃதே யென்பது நன்கு புலனாம். மெய்கண்ட நூல்களின் உட்கிடை இதுவே. வேதாகம புராண இதிகாசங்களும் வேதாந்த சித்தாந்தங்களும் சாற்றுகின்ற உயரிய நெறியாம் பண்பாட்டினை ஒவ்வொருவரும் உடையராதல் வேண்டும்.

### பொருளிலக்கணம்

இப் பண்புடைமையை வலியுறுத்தக் கருதிய ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனார் மணப்பொருத்தம் பத்தினுள் ஒன்றாகக் குடிமையைக் கூறுகின்றார். இதனால் வறியவரையும் வளமுடையவராக்குகின்ற, எளியரையும் வலியராக்குகின்ற நல்லற நெறியில் நின்று வாழ்தற்குரிய வழிகளை வகுத்துரைப்பதே தமிழிலக்கணங்களுள் ஒன்றாகிய பொருளிலக்கணத்தின் நோக்கமாம் என்பது நன்கு புலனாம். "எவ்வழி நல்லவ ராடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே'' என்ற ஒளவையார்தம் அமுதமொழியை அகத்திலிருத்தி, தம் நாட்டிலும் பிற நாட்டிலும் வாழ்கின்ற மக்களது வாழ்க்கைத் திறனை யுணர்ந்து, ஆங்காங்கு நன்னெறி நின்றொழுகும் பெரியோர்களோடு பழகி அவர்தம் செந்நெறி யொழுகுதல் ஒவ்வொருவருக்கும் கடனாம். பொருள் இலக்கணம் கூறும் தொல்காப்பியர் அகத்திணையியல் தொடக்கத்திலேயே முதல் கரு உரி எனப் பொருளை மூன்றாகப் பகுத்து விரித்துக் கூறுகின்ற முறை, எந்நாட்டிலும் மக்களது வாழ்க்கைத்திறனை யுணராது நல்வாழ்வு வாழ்தலியலாது என்பதை நன்கு விளக்குகின்றது. நல்வாழ்வு வாழ வரலாற்றோடு நிலநூலும் கற்கவேண்டும் என்பதைத் தொல்காப்பியர் சொல்லாமல் சொல்லுகின்றார். இன்று பள்ளிகளில் வரலாற்றோடு நிலநூலைக் கலந்து 'சமூக அறிவியல்' (Social Study) எனக் கற்பிப்பதன் காரணமும், மாணவர்களுக்குக் 'குடிமைப் பயிற்சி' (Citizenship training) அளிக்கவேண்டும் என்பதன் காரணமும், நல்வாழ்வு வாழ வழிகோலுதலேயாம். எனவே, தமிழிலுள்ள பொருளிலக்கணம் ஒரு சிறந்த 'சமூக அறிவியல்' நூலாம்.

(Sociology) தமிழ்மொழி பயில்வார் ஒவ்வொருவரும் 'தாம் பிறந்த இல்லாண்மை யாக்கிக்கொளலே நல்லாண்மை' என்பதை யுணர்ந்து நல்வாழ்வு வாழ, எழுத்திலக்கணம் சொல்லிலக்கணங்களோடு பொருளிலக்கணத்தையும் பயிலவேண்டும். தமிழில் பொருளிலக்கணம் என ஒன்று அமைந்துள்ளது வேறு எம்மொழிக்கும் இல்லாததோர் தனிப்பெருமையாம் என்பதன் காரணம் இஃதேயாம். வேறுமொழிகளில் பொருளிலக்கண நூல்கள் இருப்பினும் மொழிபயில்வார் ஒவ்வொருவரும் பயின்றே தீரவேண்டும் என்னும் யாப்புறவில்லை. நம் தமிழ் மொழி பயில்வார் ஒவ்வொருவரும் பொருளிலக்கணத்தைப் பயின்றே தீரவேண்டும். ஆதலின் ஒவ்வொருவரும் நல்ல பண்புடையராய் வாழ்தல்வேண்டும் என்னும் நம் பண்டைத் தமிழர்தம் பெருமையைப் போற்றுதல்வேண்டும். ஆதலின் ஒவ்வொருவரும் பொருளிலக்கணத்தை நன்கு பயில்வாராக.

---

## சிந்தனைக்குச் சில!

[தொகுப்பு : நாகை. வேலன்.]

**புத்தகங்கள்**

காலம் என்னும் கடலில் நாட்டப்பட்ட கலங்கரை விளக்கங்களே புத்தகங்கள்.

—இ. பி. விப்பில்

இனிப் பிறக்கப்போகும் மக்களுக்குப் பரிசாகப் பேரறிஞர்கள் மனித இனத்துக்குப் பரம்பரையாக வைத்துவிட்டுப் போன பரம்பரைச் செல்வமே புத்தகங்களாகும்.

—அடிசன்

ஒரு மனிதனைப் பற்றிப் புரிந்துகொள்வது எப்படி என்பதை நீ அறிந்துகொண்டால் ஒவ்வொரு மனிதரும் உனக்கு ஒரு புத்தகமாகக் காணப்படுவார்கள்.

—சானிங்

கேடு பயக்கும் ஒரு புத்தகத்தைவிட பொல்லாத கொள்ளைக்காரன் வேறில்லை.

—இத்தாலியப் பழமொழி

உயர்ந்த அறிவுடைய ஒருவன் ஓர் எளிய தொழிலாளியிடமிருந்தும் ஒரு சில படிப்பினைகளைப் பெறக்கூடும்.

—ஜே. பி. சேன்

---

# பல்லாவரம் மறைமலையடிகளார் கடிதங்கள்

## கடிதம் - ௧௦

பல்லாவரம்,
30-12-1930.

அன்பிற் சிறந்த திரு. மாணிக்கத்திற்குத் திருவருளால் எல்லா நலங்களும் பெருகுக. நலம்.

எம் மாணுக்கர் திரு. இளவழகனுரைச் சேலத்துக்கு அனுப்ப யிருக்கின்றேம். அவர் வந்து நின்னைக் காண்பார். அவருக்கு வேண்டிய இடவசதி, உணவு வசதி முதலியவைகளைத் தக்கபடி செய்திடுக. அவர் தொன்றுதொட்டு வந்த சைவக்குடும்பத்திற் பிறந்தவர். தவிர, சேலத்திலும் பிற இடங்களிலும், நமது கழக விழாவைப் பற்றிப் பெரிது முயலுக. கழக விழாப் பெருஞ்சிறப்பாக நடைபெறுமெனத் தோன்றுகின்றது. பலவிடங்களிலிருந்து பல அன்பர்கள் கழக விழா விற்கு முயற்சி எடுக்க முன்வந்திருக்கின்றனர். அதுபோல் நீயும், நின்னெடு சேர்ந்தாருந் தக்க முயற்சி எடுத்துச் சைவப்பணியுந் தமிழ்ப் பணியுஞ் செய்து சிவபெருமான் திருவருளுக்கு உரிமையாகுக. உடனே தக்க முயற்சி எடுக்கவேண்டும். உடனே விடை எழுதுக.

நீயும் நின்குடும்பத்தவரும் நலமுடனிருக்கும்படி திருவருளை வழுத்தும்

அன்புள்ள,
மறைமலையடிகள்.

இளவழகனுர் புறப்பட்டுவிட்டார், இடையில் ஓர் ஊரிற்றங்கி, வியாழக்கிழமை சேலம் வரக்கூடும்.

## கடிதம் - ௧௧

பல்லாவரம்,
1-1-1931.

அன்புமிக்க திரு. பேராஞ் செட்டியாருக்கும், திரு. ஆ. மாணிக்கத்துக்கும் சிவபிரான் திருவருளால் எல்லா நலங்களும் பெருகுக.

31-12-1930 இல் நீங்கள் எழுதிய கடிதங்கண்டு மனந் திடுக் கேட்டேம் உங்குள்ள வியாபாரிகளின் நிலை வருந்தத்தக்கது ஏதோ உங்களையொத்த அன்பர்களின் உதவியையும் திருவருளின் உதவியை யும் நம்பியே இவ்வளவு பெருங்காரியத்தைத் துவங்கிவிட்டேம். எஃது எப்படியானுலும் கடவுள் காரியம் நடத்தியே தீரவேண்டும். அப்போது தான் உலகத்துக்கும் உதவி செய்வார்க்கும் நன்மை விளையும். யாமும் இதற்காக எண்ணுயிர ரூபா செலவழித்துவிட்டேம். மேலுஞ், செல வழிக்க வழியில்லை ஆதலால், எப்படியாவது முயன்று நீங்கள் பொருள் திரட்டியுதவி இப்பெருங்காரியத்தை நடத்திவைக்க வேண்டும். வியாபாரிகளில் தக்கவர்களை மட்டும் பார்த்துப் பொரு ளுதவி கேளுங்கள். சுற்றுப்பக்கத்தூர்களிடத்துள்ள மிராசுதார்

களிடத்தும், உத்தியோகத்திலுள்ளவர்களிடத்தும் இச்சமயம் பொருளுதவி பெறமுயலவேண்டும் சில நாட்களுக்குமுன் சேலத்தையடுத்த பாகல்பட்டியில் உள்ள மிட்டாதார் திரு. பி. எல். ராமசாமி நாயக்கர் அவர்கள் இங்கே வந்து எம்மைக்கு கண்டு வேண்டுமுதவிகள் செய்வதாகச் சொல் றுதிகூறிப் போயிருக்கின்றார்கள். அவர்களையும் நாமக்கல் சர்க்கில் இன்ஸ்பெக்டரும் அன்புமிகவுடைய தமிழறிஞருமான திரு. ஆ. சிதம்பர முதலியார் அவர்களையும் சலகண்டபுரம் ஆசிரியர் திரு. வரதநஞ்சைய பிள்ளை அவர்களையும் பார்த்து அவர்கள் வாயிலாக முயன்றால் பொருளுதவி கிடைக்கும். இன்னும் சேலத்தில் பார்க்கத் தக்கவர்களை இளவழகனாரிடம் முகவரி கொடுத்தனுப்பியிருக்கிறோம். அவிநாசியில் திரு கருணாலய சுவாமிகளைக் கொண்டும் முயலல் வேண்டும். தாராபுரம் செட்டுத்தெரு, திரு. ந. ஆறுமுகம் பிள்ளையவர்களைக் கொண்டும் முயற்சி செய்தல்வேண்டும். இளவழகனார் இன்று வந்து சேர்ந்திருப்பாரென்று நம்புகின்றோம். இந்நேரத்தில் நீங்கள் செய்யும் உதவிக்குத் தக்கபலன் திருவருளால் திண்ணமாய்க் கிடைக்கும். நுங்கள் எல்லார் நலமுங்கோரித் திருவருளை வழுத்தும்

அன்புள்ள,

மறைமலையடிகள்.

## கடிதம் - கஉ

பல்லாவரம்,
7-1-1931.

அன்புமிக்க திரு. மாணிக்கத்திற்குத் திருவருளால் எல்லாநலங் களும் பெருகுக.

5-ஆம் நாள் நீ எழுதிய கடிதங் கண்டு, நீயும் நின் அருமைத் தமையன்மாரும், நம் அன்புருவாய்த் திகழும் திரு. நாகமையா, திருச்சிவநேயம், திரு. மணிமன்றவாணர், திருச்சித்தேசர் முதலியவரும் ஒருமுகமாய் நின்று முயல்வதறிந்து மிக மகிழ்ந்தேம். அன்பர்களாகிய நீங்கள் முயல்வதால் நம் கழக விழா மிக்க சிறப்புடன் நடைபெறத் திருவருள் கூட்டுமென்னும் உறுதியுடையேன். நம் அன்பிற் சிறந்த திரு. இளவழகர் தமிழாசிரியர் வரதநஞ்சைய பிள்ளையவர்களிடம் சென்றிருப்பதறிந்தேம். யாம் முற்கடிதங்களிற் குறித்திருந்த அன்பர்களிடமும் அவரை அனுப்பு. எப்போது அவரைக் கோயம்புத்தூர்க்கு அனுப்பக்கூடும்? அவ்வூரில் திரு. டி. ஏ. இராமலிங்கஞ் செட்டியார், திரு. ஆர். கே. சண்முகஞ் செட்டியார், திரு. பி. இரத்தின சபாபதிக் கவுண்டர் முதலியோரிடம் அனுப்பல்வேண்டும். நம் முயற்சி நன்கு நிறைவேறவுஞ் சைவமுந்தமிழும் எங்கும் ஓங்கவுந் திருவருள் உதவி செய்க. நேற்று விலைப்பட்டி 100-உம் கழக அறிவிப்பு 100-உம் புத்தகப் பார்சலில் அனுப்பியுள்ளோம். எல்லார்க்கும் எங்கள் அன்பைத் தெரிவி. ஒருகால் திரு. திருவரங்கம் பிள்ளையவர்கள் உப்பக்கம் வரினும் வருவர். நலம்.

அன்புள்ள,

மறைமலையடிகள்.

# செய்திகளும் குறிப்புக்களும்

## (க) திருப்பாவை இசைப்பாடல்கள் வெளியீடு:

ஸ்ரீ சென்னகேசவப்பெருமாள் அறநிலயத்தார் திருப்பாவைப்பாடல்களைத் திருமதி எம். எல். வசந்தகுமாரியைக் கொண்டு பாடச் செய்து இசைத்தட்டுகளாகப் பதிவு செய்துள்ளனர். அப் பாடல்களை மதி நிறைந்த நன்னாளாகிய மார்கழித் திங்கள் முதல்நாளன்று அறநிலைய ஆணையாளர் திரு. உத்தண்டராம பிள்ளை அவர்கள் வெளியிட்டு சைவமும் வைணவமும் சமயத்தின் இரு கண்களென்றும், அவற்றுள் ஏற்றத் தாழ்வும் ஏதும் இல்லையெனவும், அனைவரும் உள்ளமுருக ஆண்டவனை வழிபட்டு உலகம் உய்யும் வகை காண்டல் வேண்டும் எனவும் பேசினர். அத்துடன் திருப்பாவை, திருவெம்பாவைப் பாக்களின் கருத்துக்களை விளக்கி அனைவரும் அவற்றை ஓதவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

**குறிப்பு:** அறநிலையத்தாரின் அரும்பணியையும், திரு. உத்தண்டராம பிள்ளை அவர்களின் அரிய சமயப் பணிகளையும் பாராட்டுகிறோம். அரசியலார் இசைத்தட்டு வானொலி முதலிய விஞ்ஞானக் கருவிகளின் துணைகொண்டு இங்ஙனம் சமயப்பணியை நாடெங்கும் பரப்பி மக்கள் உய்யும் வகை காண்பார்களாக.

## (உ) திருவெம்பாவை—திருப்பள்ளி எழுச்சி இசைத்தட்டு வெளியீட்டு விழா.

இவ் விழா கடந்த 16—12—57-இல் சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில் சென்னை உயர் நீதி மன்ற முதன்மை நடுவர் திரு. பி. இராசகோபாலன் அவர்கள் தலைமையில் கல்வி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் இசைத்தட்டுகளை வெளியிட, இனிது நடைபெற்றது. பல அறிஞர்கள் அரிய சொற்பொழிவாற்றினர்.

**குறிப்பு:** இவ் இசைத்தட்டுகள் மேற்படி சமயப் பிரசார நிலையத்திற்கு அல்லது தருமபுர ஆதீனம், மாயூரம் அஞ்சல், தஞ்சை மாவட்டம் என்ற முகவரிக்கு ரூ. 27—8—0 அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

## (ங) இந்திய ஆட்சிமொழிபற்றித் தென்னகத் தலைவர்கள் தீர்ப்பு

“இந்திய அரசியலாரின் ஆட்சி மொழியாக ஆங்கிலம் நீடிக்க வேண்டும். அதற்கேற்ப அரசியல் சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டும்.” —**சீ. இராசகோபாலாச்சாரியார்**

“அறிவுடனும், மொழியின் பயனைச் சீர்தூக்கிப் பார்த்தும் இதில் முடிவு காணவேண்டும்.” —**டாக்டர். எம் இரத்தினசாமி.**

“இந்திமொழி இன்னும் நன்கு வளர்ச்சி யடையவில்லை. அது நன்கு வளர்ச்சி யடையும்வரை ஆங்கிலமே ஆட்சி மொழியாக நீடிக்கட்டும். இந்தி திணிப்பால் நாட்டின் ஒற்றுமை குலையும்.”

—**சர். மிர்சா. இஸ்மெயில்.**

இந்தி ஆட்சிமொழியானால் இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் 40 சத விகிதத்தினர்க்குத்தான் நன்மை உண்டு. மற்றவர்கள் தொல்லைப்பட வேண்டியதுதான். இது விஞ்ஞான காலம். காலத்துக்கேற்ப நாம் முன்னேற வேண்டும். அதற்கு ஆங்கில அறிவு பெரிதும் உதவும். —டாக்டர். சி. பி. இராமசாமி ஐயர்.

இவை, கடந்த 22—12—57-இல் சென்னையில் நடைபெற்ற மாநாடொன்றில், இந்திய ஆட்சி மொழிபற்றி அறிஞர்கள் வெளியிட்ட கருத்துக்களாகும். ஆங்கிலமே ஆட்சிமொழியாக நீடிக்க வேண்டுமெனத் திரு. சி. இராசகோபாலாச்சாரியார் கொணர்ந்த தீர்மானமும் நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவர், முதன்மை அமைச்சர், உள்நாட்டு அமைச்சர் ஆகியோருக்கு அனுப்புவதெனை முடிவு செய்யப்பட்டது.

**குறிப்பு :** தென்னாட்டுத் தலைவர்களின் இத்தகைய தீர்மானம் மிக இன்றியமையாததாகும். தேசீயத் தலைவர்கள் எனக் கருதப்படும் இவர்களே இங்ஙனம் இந்தி எதிர்ப்புப் போர் தொடுத்திருப்பது கண்டு மகிழ்கிறோம்.

### (ச) மாநிலத் தன்னாட்சி எங்கே?

"மாகாண சுயாட்சி சிறுகச் சிறுக மறைந்து வருகிறது. எல்லாத் துறைகளிலும் மத்திய ஆட்சி வலுவடைந்து வருகிறது. நாம் என்ன சாப்பிட வேண்டும் என்பதைக்கூட முடிவு செய்யும் அளவுக்கு அந்த அதிகாரம் வளர்ந்திருக்கிறது. அரிசிச் சாப்பாட்டைக் குறையுங்கள்; கோதுமை சாப்பிடுவதை அதிகரியுங்கள்; என்று கூறுகிறது மத்திய சர்க்கார். ஒரு சின்ன விஷயம் தேவையானாலும் டில்லியிடமும் திட்டக் கமிஷனிடமும் கையேந்தவேண்டியிருக்கிறது. இந்நிலையில் இந்தியை ஆட்சிமொழியாகத் திணித்தால் இந்தி பேசாத மாநில மக்கள் எத்துணைத் தொல்லைப்படுவார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்" என்று கடந்த 18—12—57-இல் சென்னை ஒய். எம். சி. ஏ. யில் பேசியகாலை திரு. சி. இராசகோபாலாச்சாரியார் குறிப்பிட்டார்.

**குறிப்பு:** திரு. ஆச்சாரியார் கூறியிருக்கும் இச் செய்திகள் புதியவையன்று. தமிழ்த் தலைவர்கள் பலர் நெடுநாட்களாக எழுப்பி வரும் கூப்பாடு. ஆச்சாரியார் போன்றவர்கள் கூறினால்தான் வடநாட்டு ஆட்சியாளர் செவியில் இச் செய்தி புகும் எனில் அங்ஙனமே ஆகட்டும்.

### (இ) பொதுமொழி பற்றித் திரு. மொரார்ஜிதேசாய் கருத்து

"மக்களில் 50 சத விகிதத்தினருக்குமேல் இந்தி பேசுகிறார்கள். 5 சத விகிதத்தினரே ஆங்கிலம் தெரிந்துகொண்டிருக்கின்றனர். எனவே பெரும்பான்மையோர் பேசும் மொழியைப் பொதுமொழியாக்குவதா? அல்லது 5 சத விகிதத்தினர் தெரிந்துகொண்டிருக்கும் மொழியைப் பொதுமொழியாக்குவதா? ஆங்கிலத்திற்குப் பதில் தமிழைப் பொது மொழியாக்கவேண்டுமானாலும் ஏற்கத் தயாராக இருக்கிறேன். தமிழ் மற்ற மொழிகளைவிட வளமுள்ள மொழிதான். ஆனால் நாம் நாட்டின் பரப்பளவைக் கவனிக்கவேண்டும்."

"இந்த நாட்டிலுள்ள சில அறிஞர்கள் பிரிவினை மனப்பான்மையுடன் பேசியது வருத்தத்தை அளிக்கிறது—அதிர்ச்சியை உண்டு பண்ணியுள்ளது. அவர்கள் என்னைவிட வயதில் மூத்தவர்கள். நான்

அவர்களை நன்கு மதிக்கிறேன். ஆனால் அவர்கள் முதுமையில் ஏற்படும் சில குறைபாடுகளுக்கு விலக்கானவர்கள் அல்லர்."

என்று 22-12-'57 இல் மதுரை—இராமநாதபுரம் வர்த்தக சபைக் கூட்டத்தில் பேசிய மைய வணிக, கைத்தொழில் அமைச்சர் திரு. மொரார்ஜி தேசாய் குறிப்பிட்டார்.

**குறிப்பு:** ஒரு நாட்டின் ஆட்சிமொழி எதுவாயிருத்தல்வேண்டும் என்பதை முடிவு செய்வதில் நாட்டின் பரப்பளவோ, பெரும்பான்மையோர் சிறுபான்மையோர் கணக்கோ பார்ப்பது சரியல்ல. அதிலும் இந்தியா போன்ற துணைக்கண்டத்தில் இம்முறை ஏற்றதன்று. இன வகை, மொழியியல் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு ஆட்சி மொழி முடிவுகட்டப்படல்வேண்டும். ஆங்கிலம் 5 சத விகிதத்தினர்க்கே தெரிந்தமொழி என்பதற்காக அதனைப் புறக்கணித்தல் பொருந்தாச் செயலாகும். அஃது உலகப் பொதுமொழி; வளமிக்க மொழி. இதனை அமைச்சரவர்கள் அறிதல்வேண்டும்.

தென்னாட்டு அறிஞர்கள் பிரிவினை மனப்பான்மையுடன் பேசியிருப்பது கண்டு வருத்தமுறும் அமைச்சரவர்கள், அத்தகைய நிலை ஏற்படக் காரணம் என்ன என்பதையும் நோக்குதல்வேண்டும். தமிழைக் கூடப் பொதுமொழியாக்குவேன் என்று கூறுமளவுக்குப் பரந்த உள்ளம் படைத்த அமைச்சர் அவர்கள் தமிழகத்தின் அரசியல் நிலையை நன்கு ஆராய்ந்து பார்த்தால் அல்லது ஆராய்ந்த அறிஞர்கள் கூறுவதைக் கேட்டால் பிரிவினை மனப்பான்மை தவறு எனக் கூற இயலாது.

## (சு) தென்னகத்துத் தீர்ப்பின் எதிரொலி!

"தென்னிந்தியாவில் என்னால் மதிக்கப்படுகிறவர்களான சில பெருமக்கள் மொழிப் பிரச்சினையில அச்சங்கொண்டு மிக அஞ்சத்தக்க முறையில் கூப்பாடுபோட ஆரம்பித்திருப்பது கண்டு வருந்துகிறேன். அறிவுமிக்க கிழவர்களான இவர்கள் இந்தி பேசும் வடநாடு தென்னிந்தியாவை அமுக்கி நசுக்குகிறதென்று நினைப்பது சுத்தப் பிதற்றலாகும்."

என்று அண்மையில் கல்கத்தாவில் நடைபெற்ற அனைத்திந்திய எழுத்தாளர் மாநாட்டில் பேசியகாலை இந்திய முதன்மை அமைச்சர் பண்டித நேரு குறிப்பிட்டார்.

**குறிப்பு:** பண்டித நேரு போன்ற பெருமக்கள், தென்னிந்தியத் தலைவர்கள் பேசிய பேச்சை அவ்வளவு எளிமையாகப் பிதற்றல் என்று கூறுவது மிகமிக வருந்தத்தக்கது. அமைச்சர்களுக்கு வரும்பொருள் உணரும் ஆற்றல் தேவை. அறிவுடையோர் கூற்றுகளுககுப் புள்ளி விவரங்களோடு, இதற்கு இதுவெனச் சுட்டிக்காட்டி விடையிறுக்கும் பண்புவேண்டும். அதனை விடுத்துப் பிதற்றல் எனக் கூறுவது அரசியல் நாகரிகத்தின்பாற் பட்டதன்று.

## (எ) அருச்சனைபற்றி அமைச்சர் பக்தவத்சலனார் கருத்து

"அர்ச்சகர்கள் நம் சாத்திரங்களில் காட்டப்பட்டுள்ள பரம்பரை வழியை நெறியுடன் கடைப்பிடிக்கவேண்டியது மிகவும் அவசியம். பழைய வழிபாட்டு முறைகளை அப்படியே வைத்துக்கொள்ளவேண்டும். நாமாவளிகளைத் தமிழில், மொழிபெயர்ப்பது என்பது முடியாத காரியம். தமிழில் அர்ச்சனை செய்வது என்ற யோசனை அர்த்தமற்றது."

என்று குளித்தலை தாலுகா கடம்பர் கோவிலில் 25-12-'57-இல் தென்னிந்திய அர்ச்சகர்கள் சங்க 17-ஆவது மாநாட்டைத் துவக்கி வைத்த அமைச்சர் பக்தவத்சலனார் குறிப்பிட்டார்.

**குறிப்பு:** அமைச்சர் அவர்களின் வடமொழிப் பற்றுக் கண்டு அர்ச்சகர்கள் மகிழ்ச்சியடையலாம். இடத்துக்கேற்ற பேச்சு எனக் கருதி அமைச்சரும் மனநிறைவு கொள்ளலாம். ஆனால் நாடு இதனைப் பொருட்படுத்தாது. தமிழ் அர்ச்சனை அர்த்தமுள்ளதா அல்லவா என்பதைப் பொறுத்துப் பார்ப்போம். சமய உலகிலும் தமிழ் தேவை என்பதற்கு ஓர் அறப்போர் தொடுக்குங்காலம் வரும்வரை அமைச்சர் போன்றோர் இங்ஙனம் பேசிக்கொண்டிருப்பர் போலும்!

## (அ) இலங்கைத் தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கம்

ஈழநாட்டில் தமிழ்மொழியினையும் பண்பினையும் போற்றிவளர்த்து வளம்பெறச் செய்யும் வழிவகைகளைக் காணும் நோக்கத்தோடு தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கம் என்றொரு இயக்கம் தோற்றுவிக்கபட்டுள்ளது. இதில் செல்வர்களும், பேரறிஞர்களும் தமிழன்பர்களும் சிறப்பு உறுப்பினராக அமைந்து பணியாற்றிவருகின்றனர். இவ்வியக்கம் கட்சிச்சார் பற்றது கல்வி பண்பாட்டுத்துறைகளில் ஈடுபடவும் பல்கலைக் கழகம் ஒன்றனை நிறுவவும் பணியாற்றிவருகிறது. உறுப்பினர் கட்டணம்: திங்கள் ரூ. 10. ஆண்டு ரூ. 120.

**குறிப்பு:** இலங்கைத் தமிழன்பர்களின் முயற்சி பாராட்டத் தக்கது—வரவேற்கத்தக்கது. கடலகடந்து வாழும் தமிழர் ஒன்றுபடவும் கடமையாற்றவும் இவவியக்கம் பெரிதும் பயன்படுமென நம்புகிறோம். வாழ்க தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கம்.

## (க) இந்தி பற்றி மூன்று மாநில அமைச்சர்களின் முடிவு

இந்தியை மைய அரசியலாரின் ஆட்சி மொழியாக்குவதற்கு இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 1965-ஆம் வருடத்தில் ஒரு நாளை எல்லையாக ஏற்படுத்தியுள்ளது.

அந்த நாளுக்கு அப்பாலும் இந்தியுடன் ஆங்கில மொழி நாள் குறிப்பிடாத காலம் வரை ஆட்சிமொழியாக நீடித்து வரவேண்டுமென்று சென்னை அரசியலார் செய்த முடிவை மைசூர், ஆந்திர மாநிலங்களின் முதன்மை அமைச்சர்கள் ஆதரித்திருக்கிறார்கள்.

மகாபலிபுரத்திலுள்ள அரசாங்க மாளிகையில் நடந்த மாநாட்டில் ஆட்சிமொழி பற்றிய பிரச்சினையில் சென்னை, மைசூர், ஆந்திர மாநிலங்களின் முதன்மை அமைச்சர்கள் மூன்று பேருக்குமிடையில் இந்த உடன்பாடு ஏற்பட்டது.

மூன்று மாநில முதன்மை அமைச்சர்களுடன் சென்னை கல்வியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம், சென்னை உள்நாட்டு அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம், ஆந்திரா கல்வியமைச்சர் திரு. பி. பி. பட்டாபிராமராவ், மைசூர் பொது மராமத்து அமைச்சர் திரு. வீரண்ணகௌட் ஆகியவர்களும் விவாதத்தில் கலந்துகொண்டனர்.

'ஆட்சி மொழி என்ற முறையில் பள்ளிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் இந்தியின் நிலைமை' என்பதுபற்றி இம் மாநாட்டில் விவாதிக்கப்பட்டது.

இறுதியாக இந்திதான் இந்திய யூனியனின் ஆட்சி மொழியாக இருக்கவேண்டுமென்ற அடிப்படை நிலையை மாநாடு ஒப்புக்கொண்டு விட்டதாகத் தெரிகிறது. ஆனால், அரசியலமைப்புச் சட்டம் நிர்ணயித்த கெடுப்படி 1965-ஆம் ஆண்டுமுதல் இந்தியே மைய அரசினரின் ஆட்சி மொழியாக ஆகமுடியாதென்றும் கருதப்பட்டது.

இந்தியை ஏகபோக ஆட்சி மொழியாகப் பின்னொரு நாள் செய்வதற்காக மாநில அரசுகளைக் கலந்துபேசி அவர்களது உடன்பாடுடன் நாள் குறிப்பிட வேண்டும் என்றும் கருதப்பட்டது.

**குறிப்பு:** அந்தந்த மாநில மக்களின் தாய்மொழியும் ஆங்கிலமும் என்று நீடிப்பதே அரசியலுக்கு ஏற்றது. எந்நாளும் எவ்விதத்திலும் இந்தி ஆட்சிமொழியாக இடம்பெறல்கூடாது.

**(௧0) மணிமுத்தாறு அணைக்கட்டு**

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மணிமுத்தாற்றில் 5·05 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள மணிமுத்தாறு அணைக்கட்டு, அமைச்சர் லூர்து அம்மாள் சைமன் அவர்களால் 3-1-'58-இல் திறந்துவிடப்பட்டது. இவ்வணைக்கட்டு கல்லிடைச் குறிச்சி புகைவண்டி நிலயத்திலிருந்து 5 கல் தொலைவில் அமைந்துள்ளது. இவ்விடத்தில் ஆற்றின் மழைநீர் தேக்கத்தின் பரப்பளவு $62\frac{1}{2}$ சதுர மைல்களாகும். இந்த அணைக்கட்டின் மொத்த நீளம் 9600 அடி. அதில் ஆற்றுப்பாகத்தில் உள்ள 1230 அடி கல்லால் கட்டப்பட்டது. இடையில் உள்ள கலிங்கல் பகுதியில் நொடிக்கு 60,000 கன அடி வெள்ளத்தைப் போக்கக்கூடிய 40 அடி நீளமும் 15 அடி உயரமும் கொண்ட ஏழு மதகுகள் பொருத்தப்பட்டுள்ளன. இவ்வணையிலிருந்து பிரியும் தலைவாய்க்கால் 28 மைல் நீளமுள்ளது. இதன்மூலம் 320 ஏரிகளுக்குத் தண்ணீர் வசதி அளிக்கப்படும்.

**குறிப்பு:** நெல்லைமாவட்ட மக்கள் பல்லாண்டுகளாக எதிர்பார்த்திருந்த இத்திட்டம் வெற்றிபெற்றது கண்டு மகிழ்கிறோம். இவ்வணைக்கட்டினால் நெல்லைமாவட்டம் மேலும் வளமும் வாழ்வும் பெறுவதாகுக!

---

## முதலாவது சிற்றிலக்கிய மாநாடு

*19-1-58* ஞாயிறு காலையிலும் மாலையிலும் சென்னை இராஜாஜி மண்டபத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர், முத்தமிழ்வித்தகர், பண்டித, வித்துவான், லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் தலைமையில் முதலாவது சிற்றிலக்கிய மாநாடு நடைபெறும். பேராசிரியன்மார் எண்மர் சொற்பெருக்காற்றுவார்கள். அன்பர்கள் திரண்டு வருகை தருக!

## ஆட்சி மொழி

*14-1-58* முதல் சென்னை அரசினர் அலுவலகங்களில் (நீதிமன்றங்கள் தவிர) தமிழிலேயே ஆட்சி நடைபெறும் என்று அரசினர் ஆணை விடுத்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

# மதிப்புரை

**"மயிலைச் சிலேடை வெண்பா"**

இதன் ஆசிரியர் திரு. **இராதாகிருஷ்ணய்யர்**, எம். ஏ., பி. ஓ. எல்., இதன் விலை அணா, பத்து.

சிலேடை என்பது சொல்லும் தொடரும் பல பொருள் படுமாறு நல்லிசைப் புலவர்கள் நயமுற யாப்பது. ஒன்றன்கண்ணே பிரிப்பு முறையால் சில பொருள் அடுத்து நிற்பதால் சிலேடை என்னும் பெயர் உண்டாயதுபோலும் அத்தகைய நுண்பொருள் யாப்புமுறையில் ஆசிரியரவர்கள் இந்நூலை யாத்துள்ளனர். ஆசிரியர் மும்மொழிவல்லார். செம்பொருட்டுணிவர். ஆசிரியர்தம் கடவுட்பற்றும், கலைநலனும், உலகியலறிவும், உற்றுக்கண் டுள்ளவாறுரைக்கும் ஒண்மையும் பிறவும் நூலின்கண் பரக்கக் காணலாம். நூல் காப்பும் வாழ்த்தும் நீங்கலாக நூறு அழகிய நேரிசை வெண்பாக்களைக்கொண்டு திகழ்கின்றது. பெரும் பான்மையும் ஒவ்வொரு வெண்பாவுக்கும் பொருத்தமான தலைப்பு அமைந்துள்ளது. கற்பார் எளிதிற் பொருள்கண்டு இன்புறும் வண்ணம் தெளிவான உரையும் காணப்படுகின்றது. சில வெண்பாக்கள் இரண்டுக்கு மேல் மூன்று நான்கு பொருள்களைத் தன்னகத்துக்கொண்டுள்ளன. நாடு, மொழி, தேவார திருவாசகம், திருவாய்மொழி, மெய்யடியார்கள், நவராத்திரி முதலிய விழாக்கள், பல பொருள்கள் முதலியவற்றை இதன் வாயிலாகச் செவ்விதின் உணரலாம். இதனை அனைவர்களும் வாங்கிக் கற்று ஆசிரியரவர்களை இதுபோல் பல செந்தமிழ்த் தொண்டு சீர்பெறச் செய்ய ஊக்குவார்களாக.

**"கோமஸ்" (Comus a Mask by Milton)**

சுருக்கித் தமிழாக்கியவர்: திரு. **ப. பச்சையப்பன்** அவர்கள். **வெளியிட்டோர்**: தமிழ்நூல் நிலையம், வில்வராணி, வ. ஆ.


இந்நூல் கவியரசர் மில்டன் எழுதிய கோமஸ் என்னும் நாடகத்தின் தமிழ்மொழி பெயர்ப்பாகும் பள்ளிமாணவர்கள் படித்தும் நடித்தும் பயன்பெறும் வண்ணம், இஃது இனிமையும் எளிமையும் பொதுளச் சுருங்கச் சொலலி விளங்கவைத்தல் என்னும் முறையிலும் அமைந்துள்ளது. இந்நூலாசிரியரின் இம்முயற்சி பாராட்டத்தக்கது. முதலில் இஃது அரசினர் அலுவலகத்தினர் மாநாட்டு மலர் ஒன்றில் வெளியிடப் பெற்றது.

இஃது இடத்துக்கேற்றவாறு எளிமையும் இனிமையும், ஒழுகிய ஓசையும் அமையப் பாடிச் சேர்த்துள்ள பல செந்தமிழ்ப் பாக்களையும் தாங்கியுள்ளது. உரைநடையும் சிறந்ததாகக் காணப்படுகின்றது. நாடகக் கலைவளர்ச்சிக்கு இஃதோர் வழிகாட்டியாகும். இதனை விலையிலா வெளியீடாக வெளியிட்டிருப்பது பெரிதும் பாராட்டத்தக்கது. இந் நூலாசிரியரின் முதன் மனைவியார் பிரிவுகுறித்து வித்துவான் திரு. செ. வேங்கடராமச் செட்டியார் அவர்கள் பாடிய தபுதாரநிலை இந்நூலின் பின்னிணைப்பாகச் சேர்க்கப்பட்டுளது.


---

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.


# முதலாவது சிற்றிலக்கிய மாநாடு (19-1-58)



உயர்திரு டாக்டர் இராசா சர். முத்தைய செட்டியார் அவர்கள்
மாநாட்டைத் திறந்துவைத்துப் பேசுதல்.



உயர் நீதிமன்ற நடுவர் உயர்திரு சு. கணபதியா பிள்ளை அவர்கள்
சொற்பொழிவு நூலைப் பாராட்டி வெளியிடுதல்.



சங்கச் செயலாளர் திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துதல்.



மறைமலையடிகள், கா. சு. பிள்ளை படங்களைத் திறந்துவைத்த டாக்டர் மு. வரதராசனார் அவர்களும், ஆசிரியர் இளவழகனார் அவர்களும், மாநாட்டுத் தலைவர் இராமநாதன் செட்டியாரவர்களும்.